# இலக்கணத்தேறல்

- S.B. காசிநாதன் -



அமரர்

## தணிகாசலம் சசிரூபன் (சசி)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

15.09.2007

உ
சிவமயம்



அமரர்

# தணிகாசலம் சசிரூபன் (சசி)

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

15.09.2007

உ

சிவமயம்



தோற்றம்

22-04-1962

மறைவு

02-08-2007

அமரர்

# தணிகாசலம் சசிரூபன் (சசி)

அவர்களின்

## திதிப் பாடல்

ஆண்டு சர்வசித்து ஆடிபதினேழு பூரட்டாதியில்
பூண்ட அபரபக்க சங்கடகரசதுர்த்தியிலே - நீண்டபுகழ்
தணிகாசலம் சசிரூபன் தன்னுடல் நீத்துச் சங்கரனிடம்
துணிவோடு சென்றிட்டான் துறந்து!

உ

சிவமயம்



## தேவாரம்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்மெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

## திருவாசகம்

பால்நினைந்தூ ஊட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரமன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோம மாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம்செய் கின்றபூங்கழல் போற்றி! போற்றி!!





உ



**திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய**

## திருமறைக்காட்டுத் திருப்பதிகம்

### திருக்குறுந்தொகை

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1.

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்ட நீரே அருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2.

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. 3.

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுவட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருந்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4.

மலையில் நீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறைஞ் சுங்கழல் ஏத்தரோ
விலையில் மாமணி வண்ண வுருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமே. 5.

பூக்குந் தாழை புரணி அருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடிகேள் உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6.

வெந்த வெண்பொடி பூசும் விகிர்தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7.

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8.

சுண்ண வெண்பொடி பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9.


விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10.

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழிமறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்தினே. 11.





உ



# நாகபூஷணியம்மை தோத்திரம்

## (நயினை க. இராமச்சந்திரா)

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்இனத்தார் வாழ்வொன் றே கருதவில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையையான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டுகிறேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!

உ

சிவமயம்

# திரு. தணிகாசலம் சசிரூபன் (சசி)
## அவர்களின்
# நினைவஞ்சலிப் பாமாலை

ஆனைமுகப் பிள்ளையாரின் அருட்கழலிணை பணிந்தே
பானை வயிற்றோனின் பத்ம மலர்ப்பாதங்கள் பணிந்தேத்தி
தணிகாசலம் சசிரூபன் தரணி விட்டுப்பிரிந்து வானுலகடைந்த
அணிநலங் கூறிடமுனைகின்றோம் பிழையிருப்பின் பொறுத்திடுக!

நாகபூஷணி நல்லருள் புரியும் நயினையம்பதியில் வாழ்ந்த
தணிகாசலம் சௌந்தராதேவி அம்பிகையருளால் பெற்றெடுத்த
செல்வம் சசிரூபன் சிந்தையில் களவின்றி நற்பண்புகள் மிளிர்ந்து
எல்லோரும் போற்றிட நல்ல பிள்ளையாக வாழ்ந்திருந்தானே!

மூத்த விநாயகரையும் கருணைமிகு அம்பாளையும் வணங்கியவரும்
காத்தருள்புரிய வேண்டுமென தொண்டுகள் செய்து போற்றியவரும்
செய்த தவப்பயனால் தோன்றிய புதல்வன் எங்கள் சசிரூபன் தான்
கல்வியிற் சிறந்து காசினியோர் புகழ்ந்திட வாலிபனாக வளர்ந்தான்!

தனக்கு முன்பிறந்த தமையன் தவயோகன் மனம் மகிழ்ந்திட
பிணக்கு ஏதுமின்றிப் பிரியமுடன் பழகி அன்புகாட்டி வாழ்ந்து
அழகிய வாலிபனாக அவனியில் சிறந்த ஆணழகனாக மிளிர்ந்து
பழகிய பழக்கத்தால் பண்புள்ள பிள்ளையென பாரோர் புகழ்ந்திட





வளர்ந்து வந்த சசிரூபன் தன்தம்பி அஜந்த தாசனுடனும்
வெளிநாடு கட்டாரில் வாழும் அருமைத் தம்பி அமலனுடனும்
அன்பு பாராட்டி, வேம்படி மகளிர் மாணவி தங்கை சிவரூபினியுடனும்
என்றும் இனியவனாய் எல்லோர்க்கும் நல்லவனாய் வாழ்ந்திட்டான்!

சிந்தனையில் எந்நாளும் சிறப்பான நல்ல சீரான எண்ணத்துடன்
கந்தனைக் கரங்குவித்துக் காலமெல்லாம் களிப்புடனே வாழ்ந்த
சசிரூபன், சாந்தகுணமும் அடக்கமும் பணிவும் கொண்டவனாக
உயர்தொழில் நுட்பக் கல்லூரியில் உயர்மாணவனாக இருந்தானே!

சிந்தையில் நல்ல சிறப்பான எண்ணங்கள் வருவதைக்கண்ட
தந்தைணிகாசலமும் சகுந்தலாதேவியும் உள்ளங்குளிர்ந்திட
விந்தை மிகு மாணவனாய் வியத்தகு பிள்ளையாய்த் திகழ்ந்த
செல்வன் சசிரூபன் செகமது புகழவே இகமதில் வாழ்ந்திட்டான்

**கண்ணியமும் கடமையும் கட்டுப்பாடும் இவனது சொத்துக்கள்**
**புண்ணியஞ் செய்திட்ட பெற்றோர்க்கு புகழ்கொடுக்கும் பிள்ளையாக**
**மண்ணிலே நல்ல வண்ணம் மாண்புடன் வாழ்ந்திடும் நாளில்**
**கண்ணிலே கருமணிபோல் கவினுறு கவிதையும் கட்டுரையும்**

**'துளிர்'** என்ற சஞ்சிகையை கவினுற வெளிவரச் செய்த தூயவன்
**களிபேருவகையுடன் காலந்தோறும் தவறாது கடமையுடன்**
**ஞாலம்** புகழவே நல்லமுறையிலே பிரசுரிக்கத் தன்னையே அர்ப்பணித்த
**பாலமாய்** நின்று பணிசெய்த பண்பை என்னென்று சொல்வது?

நாமகளின் நல்லருள் நவின்றிட்ட சசிரூபன் நல்லமுறையில்
பூமகளின் புன்னகையால் பொலிந்தே தோன்றிய பொன்மனத்தோன்
பார்வதியின் நாயகன் பரமசிவன் அருளாலே பாரினிலே உயர்வுற்று
தேர்வுகள் பலவற்றில் சிறப்புச் சித்தி பெற்று தேக சுகத்துடனிருக்க

எருமை மீது ஏறிவரும் அந்தப் பொல்லாத யமதர்மராஜனவனும்
பெருமையாகப் புறப்பட்டு வந்து பேரம்பேசியே சசிரூபன் தனது
இன்னுயிர் கவரவே இரக்கமின்றி அரக்கனாக வந்து விட்டான்
தன்னுயிரீந்தான் நமது **சசிரூபனும்** பசிதீர்ந்திட்டான் காலன்!

சர்வசித்து வருடம் ஆடிமாதத்தில் சங்கட கரசதுர்த்தித் திதியில்
பூர்வஜென்ம புண்ணியப்பயனால் இவ்வுலக வாழ்வை விடுத்து நீங்கி
பூதவுடல் வேண்டாமென்று புகழுடம்பைப் பெற்றுக்கொண்டே
நாதனவன் திருவடியை நண்ணிச் சென்றடைந்தான் நலமுடனே!

வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம் என்பதை உணர்த்திடவே
சசிரூபன் தன் வாழ்வை அர்ப்பணித்து அகிலம்புகழ வாழ்ந்திட்டான்
அன்புடையானின் நல்லாத்மா சாந்திபெறப் பிரார்த்தித்து வணங்குதலோடு
இன்று உமக்கு அஞ்சலிதான் செய்ய முடியுமையா ஏற்றிடுக எம்
பூஜையை!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**நில்லாதனவற்றை** நிலையின என்றுணரும்
**புல்லறி** வாண்மை கடை.





# தாய், தந்தை உள்ளக் குமுறல்

நேற்றிருந்த முகமே நினைவில் நின்றாடுதய்யா!
காற்றோடு கலந்த கதை கனவாய்ப் போகாதோ – நீ
வீற்றிருந்த அறையும் வெறும் அறை ஆனதய்யா
தேற்ற நாதியின்றி தேம்பியழு எம் விதியோ!

சசி! சசி! என்றலறித் துடித்தாலும்
சத்தியவான் உனைக் காணமுடியாதையா
சத்திரவாதிகளின் சதியினால்
நீயும் சென்றாயடா?

ஊரெல்லாம் பேர் சொல்லும் உயரம் எமக்களித்தாய்
தேரோடும் வீதியெல்லாம் தொழுது நின்றாய் ஐயா!
பாரெல்லாம் நாம் தேடிப் பார்த்தழுது நின்றாலும்
பார்க்க முடியவில்லை ஐயா நாம் பாவி உன் முகத்தினையும்

மீண்டும் உன் ஆசைமுகம் காணவும்
உன் மழலைப் பேச்சுக்கள் கேட்கவும்
உன் 'பகிடி' க்கு சிரிக்கவும்
உன் புன் சிரிப்பையும் இனி யாரிடம் காண்பதையா?

# அண்ணா, தம்பிமார் புலம்பல்

எண்பத்திரண்டு சித்திரையில் பிறந்தாயே
என்னும் பல சாதனைகள் செய்வாயென்று
எண்ணியிருந்தோமே நாங்கள்
யமதர்மராஜனின் விதியோ சதியோ நாமறியோம்
எப்பிறப்பில் செய்த பாவமையா நாமறியோம்
நீ இப்பிறப்பின் பாதியிலே சென்றனையோ
எண்ணிப் பார்க்கவே முடியவில்லையே
உனது மறைவதனை – எழுதிக்
கொள்ள முடியவில்லையே
எமது மனக் குமுறல்களை எல்லாம்....

# தங்கை புலம்பல்

நீறு பூசிய நெற்றி எங்கே? – என்
நிம்மதி பெருமூச்சு எங்கே
வீராப்பாய் பார்க்கும் கண்கள் எங்கே?
விந்தையான திருவாய்ப் பேச்சு எங்கே?
ஆறுபோல் அள்ளிக்கொடுத்த கைகள் எங்கே?
ஆறரைக்குச் சென்ற அண்ணா எங்கே?
அன்பாய்ப் பேசிய வார்த்தைகள் எங்கே?
அரவணைத்த கைகளும் எங்கே?
அரட்டையடித்த நாட்கள் எங்கே?
எங்கே? எங்கே? என் சசி அண்ணா எங்கே?





# உடன்பிறவாத சகோதரர்களின் உள்ளத்திலிருந்து.....

மரணங்கள்
மலிந்துவிட்ட
தேசத்தில் – எம்
சகோதரனாய் மலர்ந்தவனே!

மரணம் வந்து
முத்தமிட
விழி மூடிப்
போனவனே!

**தம்பியாக நீ எமக்கு**
**இல்லை, இல்லை தந்தையடா**
**தன்னலமற்ற பிள்ளையடா!**

முல்லை போன்ற
சிரிப்பதனை
மூர்க்கமாய் பறித்தவர் யார்?

பதறுது பார் நெஞ்சு!
கதறுது பார் உறவு!
நாற்பத்தைந்து நாட்கள் – உன் முகம்
காணாத விழிகள் கண்ணீரில் கரையுது பார்?

நாம் செய்த பாவம் என்ன?
தமிழன் பெற்ற சாபம் என்ன?
பிந்தி வந்த உடன் பிறவா பிறப்பே
முந்திக் கொண்டு போனதெங்கே?

தெய்வத்துக்கு கண்ணும் இல்லை
தேம்பி அழ தெம்பும் இல்லை
தேடிக் கிடைக்காத செல்வமடா நீ
தீயிலும் தீயாத தங்கமடா!

இன்னும் ஒரு பிறவியிருந்தால்
யுத்தம் இல்லாத
தேசம் ஒன்றில் எங்களுக்கு
தம்பியாய், மகனாய், பிறந்து வா!

*உன் நீங்காத நினைவுகளுடன்*
*உற்ற நண்பர்கள்,*
*நண்பிகள்*





# மைத்துனி குடும்ப உணர்வலைகளிலே....

எண்பத்திரண்டினிலே! எம் உறவில் உதிரமானவனே!
எங்கய்யா சென்றாய் நீ! ஏக்கமுடன் தவிக்கின்றோம்!
சாதுவின் பதியென! சகலரும் வாயாரக் கூறினரே!
காது கொடுத்துக் கேட்டோமே! கண்குளிரக் கண்டோமே!
யாரு செய்த சதியப்பா! யாமறியாமல் தவிக்கின்றோம்!
வெள்ளி விழா அகவையுடன் வெறுத்தாயா?
வாழ்வினையே!
துயில் நீங்காப் பள்ளி கொள்ள துள்ளிச் சென்ற
மர்மமென்ன?
மணக்கோலம் காணும் நேரம் பிணக்கோலம் காட்டினாயே?
குணக் குன்றாய் ஒளிர்ந்தவனே! கணநேரக் கர்மமென்ன!
அழகான உன் எழுத்துக்களில் அலங்காரக் கோலம்
கண்டோம்!
**அடக்கமான உன் பேச்சினிலே அன்புள்ளத்தைக்**
கண்டோம்?
**தளர்வான உன்** நடையினிலே தெளிவினைக் கண்டோம்!
திருத்தமான செயல்களிலே உன் திறமையினைக்
கண்டோம்!
கண்களின் ஒளிர்வினிலே கருணையினைக் கண்டோம்!
மனித விழுமியத்தை மாண்புறக் கொண்டாயய்யா!
மிருக குணம் கொண்டவர்கள் பறிகினரே உன்னுயிரை!

'சசி' என்று கூறி கசியாதோர் இங்கில்லை!
விதி செய்த சதியில் கதி கலங்கித் தவிக்கின்றோம்!
தனயனை இழந்து துடிக்கின்ற தந்தையைப் பாராயோ!
பெற்ற அன்னையவள் உதிரத்தின் துடிப்பினை பாராயோ!
உடன் பிறப்புக்களின் உருக்குலைவைப் பாராயோ!
உற்றாரும் உறவினரும் உருகி நிற்பதனைப் பாராயோ?
உறவில் மைத்துனனாய்! உரிமையில் மகனாய்!
உறவாடி வாழ்ந்தோமே! ஊனமடையவில்லை நம் உறவு
திரும்பி நீ வருவாயென! விரும்பியே காத்திருப்போம்!
காத்திருப்போம் காலமெல்லாம்! காலனுடன் போரிடுவோம்!

*தயானேசன் குடும்பம்*

## பெறாமகனின் பெருமூச்சில்...

சித்தப்பாவே! உன் சிரித்த முகம் எங்கே?
சிறகடித்து பறப்பாய் என சிந்தனையில் சிறை வைத்தேனே!
எந்தனை ஏமாற்ற எப்படி மனம் கொண்டீர்?
உந்தனை பார்க்காமல் உறவுகள் கலங்குதய்யா!
வந்தனை செய்வதற்கு வித்துடலை ஏன் தந்தீர்?
மண்ணிலே மலர் விரிக்கும் நேரமதில் விண்ணிலே ஏன் சென்றீர்?
மடிந்த செய்தி கேட்டு இடிந்ததப்பா என்னிதயம்
மானிட வாழ்வின் இனிய சுவடுகள் மாயமாகிப் போன மர்மமென்ன?

*த. நிரோஷன்*





## ஆருயிர் நண்பனிற்கு ஓர் அன்பு மடல்

அன்பு நண்பன் சசிக்கு
முகவரிதான் தெரியா விடினும்
வரைகின்றோம் இம்மடலை
ஆருயிர் நண்பா!
எம்மை விட்டு நீ – எங்கே சென்றாயடா!
நித்தம் நித்தம் நீ தொழும் இறைவன் – தன்
சிறந்த பக்தனென பக்கத்தில் அழைத்தாரோ!
அல்லது மண்ணுலகில் அல்ல விண்ணுலகிற்கு
பரம சாது தேவையென உன்னை தேர்ந்தெடுத்தாரோ!!

நண்பா – நீ எப்படியோ...
எமக்கிங்கு எதுவுமே தெரியாது – ஆனாலும்
நாமெல்லாம் இங்கு உன் நினைவுகளை
சுமந்தபடி உனைப்பிரிந்த சோகத்தில்
சுருண்டுபோய் தவிக்கின்றோம்
எம் வகுப்பு உன் வரவிற்காய்
வாசலையே பார்த்திருக்கிறது
உன் அடக்கமான பேச்சு,
அமைதியான பண்பு,

நாசூக்காக நீ சொல்லும் நகைச்சுவை
உன் உயரிய ஒழுக்கம் – இவையெல்லாம்
எம்மை மட்டுமல்ல – மாறாக
அனைவரையும் கவர்ந்தது தான்

எம் ரகுசேர் க்கு நீ ஓர் எடுப்பார்கைப்பிள்ளை
ரூபி மிஸ் க்கு நீ ஓர் செல்லப்பிள்ளை
எமக்கெல்லாம் நீ நல்லபிள்ளை – ஆனாலும்
உன் இடம் வெற்றிடமாய்
அழுதபடி இருக்கின்றது
எப்படி நிரப்புவது? எப்போது நிரப்புவது?
யார் நிரப்புவது
மௌனம் தான் உன் பதிலா?

சசி! உன்
பால்வடியும் முகம் கூட
பகைவரிற்குத் தெரியவில்லை
தர்மம் தலைகுனிந்து
அதர்மம் தலை விரித்தாடும்
அழியும் இப் பூமியில்
பாவியான நீ கூட
பலிக்கடாவாகி விட்டாய்!
பதறினோம்.. பரிதவித்தோம்





இறைவனிடம் மன்றாடினோம்..
நீயாக இருக்கக் கூடாதென
மனதைத் தேற்றினோம் – ஆனாலும்
பலனில்லை.
படைத்தவன் அறுவடை செய்துவிட்டான்
எம்மால் என்ன செய்யமுடியும்
ஆனாலும் – உன் வரவிற்காய்
ஆவலுடன் காத்திருக்கின்றோம்
ஆருயிர் நண்பா... தாமதமில்லாமல்
மீண்டும் பிறவி எடுத்துவா...
நாமெல்லாம் ஒன்றாய்ப் படித்து
உயர்வு அடைந்திடுவோம்
உன் வரவை எதிர்பார்த்துக்
கண்ணீருடன் காத்திருக்கும்

*உன் துளிர்களின்*
*இரண்டாம் அணி நண்பர்கள்*

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

# நீத்தார் கடன்கள்

நமது தாய் தந்தையர் நம்மைப் பெற்றெடுத்து இகலோக நன்மைக்காகவும் பரலோக நன்மைக்காகவும் வளர்க்கின்றனர். புத்திரன் இல்லாதவர்களுக்கு நற்கதி இல்லை என்றும் அவர்கள் புத் என்ற நரகத்தைச் சென்றடைவர் என்றும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஒருவர் இறந்த பின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படும் கிரியைகள் அபரக்கிரியைகள் எனப்படும். அபரம் - பிந்திய எனப் பொருள்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை, தாய் தந்தையர்க்குச் செய்யவேண்டிய கடமை களை அவர்கள் உயிருடன் இருக்கும் போதும். இல்லாத போதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வெண்டும். அபரக் கிரியைகளின் பலனைச் சிவாகமங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய் தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன் தரா என்பது கௌசிகர் வரலாறு மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாகும்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்க் கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் அதனை " தென்புலத்தார்" என முதலில் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும் பேறு களும் சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரம் தவறியவராவர். பிதிரார் வருந்தின் பெருந்தீமைகள் நேரும்.

இறந்த பின் எமது தாய் தந்தையர்கள் வேறு உலகம் செல்வதால் அவர்கள் தமக்குத் தேவையான உணவையும் நீரையும் தேடிக் கொள்ள முடியாது. ஆதலால் அவர்கள் பிறர் கையை நம்பியே எதிர் பார்க்கிறார்கள். பசியாலும் தாகத்தாலும் வாடுகின்ற எமது பெற்றோர் களுக்கு விதி தவறாமல் குறிப்பிட்ட காலங்களில் மந்திரங்களைக் கூறி நாம் செய்யும் சிரார்த்தம், தர்ப்பணம் (எள்ளும் தண்ணீரும் இறைத்தல்) என்பன அவர்களிடம் போய்ச் சேரும்.





முறை தவறிச் செய்தாலும் செய்யாமலிருந்தாலும் அவர்கள் பசியோடு வாடுவர். அப்போது கோபம் உண்டாவது இயற்கை. எனவே இயல்பான அன்பை விட்டுச் சாபம் கொடுப்பார்கள். அதனால் தான் அவர்களுக்குச் சாபாயுதர்கள் என்று பெயர். (சாபத்தை ஆயுதமாக உடையவர்கள்) வயிறு நிறைந்து மனம் குளிர்ந்தால் பூரணமாக ஆசிர்வாதம் செய்வர். பிதிர்கள் மனம் மகிழ்ந்தால் புத்திரப் பேறு, செல்வம், ஆரோக்கியம், கல்வி, கீர்த்தி முதலிய சகல சம்பத்துக்களும் உண்டாகும்.

குழந்தைப் பருவத்திலே உணவுதேடி உண்ண சிசுவிற் சக்தி இல்லை. பெற்றோர் பசியறிந்து உணவூட்டி நோயுற்றால் மருந்தூட்டி தமதுடலையும் கவனியாமல் காக்கின்றனர். அதேபோல் உடலைவிட்டு ஜீவன் செல்லுமிடத்தில் தன் உணவைத்தானே தேட முடியாமல் தவிக்கிறது. நம்மை இளமையில் காத்ததற்கு நன்றி பாராட்டவாவது ஈமக்கடன்களை நன்கு செய்யவேண்டும் என்று தர்மபாசம் நம்மைக் கட்டுப்படுத்துகிறது. ஜீவன் ஓராண்டில் யமனிடம் கொண்டு போகப்படும்.

## எள்ளும் தர்ப்பையும்

யஜ்ஞவராக மூர்த்தியாகத் தோன்றிய மஹாவிஷ்ணுவின் மனத்திலிருந்து எள்ளும், பிராணனிலிருந்து நீரின் சாரமான தர்ப்பையும் தோன்றின. பகவான் விஷ்ணு அசுரர் குலத்திற்கு அந்தகன். அவர் பெயரைக் கூறினாலே அரக்கர் பயந்தோடுவர். ஆதலினால் சிராத்த காலத்தில் சிரார்த்த சம்ரக்ஷக விஷ்ணுவை வரிக்கிறோம். அவரிடம் உண்டான எள்ளையும் தர்ப்பையையும் உபயோகித்தால் அசுரர் கிட்ட வரமாட்டார். ஆதலால் சிராத்தம், தர்ப்பணம் செய்யுமிடங்களிலெல்லாம் எள்ளைத் தூவுகிறோம். தர்ப்பை பவித்ரமானது என்று சுருதி கூறுகிறது. தர்ப்பை பகைவரை விரட்டக்கூடிய அம்பு ஆகும். தர்ப்பை இல்லாத கர்மா இல்லை என்றே கூறலாம்.

### திசையின் முக்கியத்துவம்

தேவர் பித்ருக்கள், மனுஷ்யர், ருத்ரர் ஆகியவர்கள் ஒவ்வொரு திசையைத் தமக்கென ஏற்படுத்திக் கொண்டனர். கிழக்கு தேவர்கட்கும், மேற்கு மனிதர்கட்கும், தெற்கு பித்ருக்களுக்கும், வடக்கு ருத்ரர்களுக்கும் என வதம சூறுகிறது. பித்ரு லோகத்துக்குத் தலைவனான யமதர்மராஜன் தென்திசையிலேயே இருக்கிறார். ஆதலால் பித்ருகர்மாக்கள், எல்லாவற்றையும் தெற்கு முகமாகவே செய்ய வேண்டும். சிராத்தத்திற்கு தெற்கு நுனியாக்த் தர்ப்பைகளைப் போட்டு அதன்மீது பித்ருக்களை ஆவாஹனம் செய்ய வேண்டும்.

### சிராத்தத்தின் தேவை

ஸபிண்டீகரணமாவது இறந்தவரை அவரது தந்தை, பாட்டன் முதலியவர்களுடன் பிண்டமளித்துச் சேர்த்துவிடும் கிரியையாகும். சிராத்தம் என்பது சிரத்தையுடன் செய்வது. எனவே இவற்றைச் சிறந்த முறையிலே செய்யவேண்டும். மறுவுலகில் ஜீவனுக்கு வேண்டிய வஸ்திரம், குடை, தீர்த்த பாத்திரம், பாதுகை, படுக்கை முதலிய சகல பொருட்களையும் தானம் செய்யவேண்டும். அவை இறந்தவருக்குக் கிடைத்து இன்பமளிக்கும்.

பசி, தாகம் அடங்குவதற்காக நித்ய சிராத்தம் செய்வதுண்டு. இறந்த திதியில் 12 மாசியங்களும் 12 சோதகும்பமும் இடையிலே ஊனமாசியம் முதலியனவும் (16) செய்து முடிவில் ஆப்திகம் செய்வது புத்திரர் கடமை.

### ஆன்மாவின் பயணம்

ஜீவன் வழியில் கிங்கரருடன் 16 இடங்களில் தங்குகின்றான். புத்திரன் செய்யும் சிராத்தம் அந்த லோகத்துக்கு ஏற்ற உணவாக ஜீவனுக்கு அளிக்கப்படும். அதற்காகத்தான் சுடுகாட்டிலிருந்து திரும்பியதும் நக்ந சிராத்தம் செய்து வஸ்திரம், தீபம், தீர்த்தபாத்திரம் முதலியன தானம் கொடுக்கப்படுகின்றது. பிண்டத்தில் பாதிப்பகுதி பிரேதவுடலை வளர்க்கும். கால்பங்கு கிங்கரர்





களுக்குத் திருப்தி தரும். அதனால் அவர்கள் ஜீவனை இம்சிக்க மாட்டார்கள். மற்றொரு கால்பங்கு பிண்டதானம் செய்பவருக்கு நன்மை உண்டு பண்ணும்.

### அபரக் கிரியைகள் வகை:

இவை தகனக்கிரியை, அத்திசஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசிகம், சிராத்தம் எனப் பல பகுதிகளை உடையன. இவைகள் உத்தரகிரியை, சிராத்தக்கிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோருக்கு மாத்திரம் சைவக்கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடியார்கள் சிவனேயாவர். அவர்களுக்குரிய உத்தரகிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிராத்தம் பூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும்.

### மரணக் கிரியைகள்:

சுத்த சைவர்களுக்குச் செய்யும் தகனக் கிரியையில் மூன்று பகுதிகள் உள. அவையாவன; பேரிகையடித்தல், உடற்சுத்தி, ஆன்மசுத்தி என்பனவாகும்.

### பேரிகையடித்தல்:

ஆசாரியர் புண்ணியாகம் செய்து அந்த நீரினால் இடத்தையும் பொருளையும் சுத்தி பண்ணி, மேளத்திலே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் முதலிய மூர்த்திகளைப் பூசித்து மேளமடிப்பர். மேளமடிக்கும்போது சொல்லும் மந்திர வாக்கியத்தின் பொருள் "இறந்த ஆன்மா நன்மையடைய வேண்டும் எனவும், பூமியிலும் மறு உலகங்களிலும் உள்ள யாவரும் வாழவும், அசுரர் போன்ற கொடியோர் அடங்கவும், சகல உயிரினங்களுக்கும் ஐஸ்வர்யம் உண்டாகவும் வேண்டும். மிருகம், பறவை முதலிய உயிரினங்களுக்கும் நன்மை உண்டாக வேண்டுமெனவும் உமாதேவியார் கட்டளைப்படி பேரிகை அடிக்கிறேன். சிவபெருமான் இதனை இரட்சிக்க" என்பதாகும். (இன்று ஆசாரியர் இதனை அடிப்பதில்லை. இதற்கு அறிகுறியாக மணியை மாத்திரம் அடிக்கிறார்).

**உடற்சுத்தி:**

சிவாச்சாரியர் பந்தலின் நடுவில் சிவ கும்பமும், உருத்திர கும்பமும் வைத்து அவற்றின் முன் ஓமாக்கினியை வளர்த்து சிவனையும் உருத்திரனையும் வழிபடுவர். எண்ணெய், பஞ்சகவ்வியம், இளநீர், மஞ்சள் நீர், சிவகும்பநீர் ஆகியவைகளில் இறந்தவர் உடலை நீராட்டிச் சுத்திசெய்து - புத்தாடை புனைந்து, நீறு சாத்திப் பூச்சூடி பிரணவமான தர்ப்பையில் வைப்பர்.

சிவாச்சாரியர் பஞ்ச சுத்திகளையும், சகளீகரத்தையும் செய்து, அக்கினி வளர்த்து, அட்ட திக்குத் தேவர்களையும், சிவனையும் வழிபட்டு அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெறுவர். கும்பத்திலிருந்த சிவனை உடலின் மீது எழுந் தருளும்படி வேண்டி வழிபாடு செய்வார். இருதயத்தில் சிவனை ஆவாகனம் செய்து கொள்வர். பின்னர் ஆசாரியர் இறந்தவரின் நித்திய அனுட்டானக் குற்றங்களைத் தீர்க்க ஆகுதி செய்து, அவ்வுடலுக்கும் தனக்கும் நாடிசந்தானம் செய்து, அழைக்கப்பட்ட ஆன்மாவைத் தன் இருதயத்திற்குக் கொண்டுவந்து, உருத்திரனைத் தியானித்துப் பூரணாகுதியுடன் உருத்திர மூர்த்தியை அடையும் வழியில் விடுவர்.

**சுண்ணம் இடித்தலும் பந்தம் ஏற்றுதலும்:**

பாவங்களை நீக்குவதற்காகச் சுண்ணம் இடிக்கப்படுகின்றது. பாவங்கள் அகன்றதும் திருவருள் உண்டாவதற்காகப் பந்தம் ஏற்றப்படும். இவைகளைத் தொடர்ந்து திருமுறைகள் ஓதப்பெறும்.

**சுடலை சேர்தல்:**

உடலைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும்பொழுது அட்ட திக்குத் தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக வழியிலே நெற் பொரி தூவப்படும். (சைவாசாரமுள்ள ஒருவரே இதனைச் செய்யத் தக்கவராவர்) ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாகித்த சிவாக் கினியும், கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடலையில் நான்கு முழ நீளம், இரண்டு முழ அகலமான இடத்தில் மஞ்சள் குங்குமம் இட்டு விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடம் சிதாத்தானம்





என்று பெயர் பெறும். இச்சிதாத்தானத்தில் அடுக்கப்பட்ட விறகினைச் சுற்றி வந்து அதன் மீது உடலை வைத்துத் தற்புருட மந்திரம் சொல்லி நீரையும் அரிசியையும் இறந்தவர் வாயில் இடுவர்.

**தீயிடல்:**

கும்பத்துடனும் சிவாக்கினியுடனும் உடலைச் சுற்றி வந்து கும்ப நீரை உடலுக்குத் தெளித்து குடத்தை முன்பாக நிலத்திற் போட்டு சிவாக்கினியை விறகின்கண் இட்டு எரியச் செய்வர். கொள்ளி வைத்தவர் பின் நீர்க்கரையில் நீராடி வீடு செல்வார். தீ இடும் பொழுது "அக்கினி தேவனே பரிசுத்தமாயிருக்கின்ற உடலின் மந்திரத்தாலுண்டான பூரணாகுதியை ஏற்றுக் கொள்ளும்" என நினைத்துக் கொண்டே தீயிட வேண்டும்.

**அத்தி அஞ்சயனம்:**

அத்தி சஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலிலிருந்து எலும்புகளையும் சாம்பலையும் எடுத்துப் புண்ணிய நீரில் சேர்த் தலாகும். அத்தி - எலும்பு, சஞ்சயனம் - கரைத்தல். இஃது கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளைச் சாம்பலுடன் எடுத்து பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்தலாம். அத்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாம்.

**நக்னதானம்:**

இது தகனக் கிரியை முடிந்தபின் இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டு குடும்பத்தாரால் ஆசாரியருக்கு ஆடை, அரிசி முதலியவற்றைத் தானமாகக் கொடுத்தல்.

**அந்தியேட்டி:**

அது ஆசௌசக் கடைசியில் செய்யப்படும் யாகம் எனப் பொருள்படும். அந்திய - கடைசி நாள், இட்டி - யாகம், இறந்தவரின்

ஆன்ம சித்திக்காக இது நடைபெறுகிறது. இறந்தவரின் சமய அனுட்டானத்திலுள்ள குற்றங்கள் இதனால் தீரும். புண்ணிய நீர்க்கரையில் நிகழும் கிரியை இது. இதனால் இதனை நீர்க்கடன் என்றும் கூறுவர்.

**பாடான பூசை (பாஷாண பூசை):**

ஒரு கல்லை வைத்து, இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூசை, இப்பூசையினால், இதனோடு கூடிய மற்றும் கிரியைகளினாலும் பிரிந்த ஆன்மாவானது சிவ பதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாகும்.

**ஏகோதிட்டம்:**

ஆசௌசம் நீங்கிய அடுத்த நாள் இறந்தவருடைய ஆன்ம சுத்திக்காகவும் நற்கதியடையும் பொருட்டும் செய்யப்படும் கிரியை. இக்கிரியையில் இருக்கும் ஆசாரியரை இறந்த ஆளாகப் பாவனை செய்து, அவருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமான அளவு பொருட்களைத் தானமாகக் கொடுத்து ஒரு வருடம் முடியும் வரை எதிர்ப்படாமல் இருக்கச் செய்தல். தானமாகக் கொடுக்கப்பட வேண்டிய பொருட்கள்: உணவுப் பொருட்கள், உடை, திருநீற்றுப்பை, செபமாலை, குடை, மிதியடி, பொன் முதலியவையாகும்.

**சபிண்டீகரணம்:**

ஏகோதிட்டத்திற்கு அடுத்த நாளிலே பிதிர் தேவர்களோடு இறந்தவரைச் சேர்த்தற்கு நடைபெறும் கிரியை. சபிண்டீகரணத்தால் ஆன்மா சுத்திபெற்றுச் சிவலோகம் சேரும். இக்கிரியை பிண்டமிட்டுச் செய்வதனால் இது சபிண்டீகரணம் எனப்படும். பிண்டத்திற்குரிய பொருள்கள் அரிசி, எள், உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை ஆகியனவாகும். பிதிரர்க்குச் செய்யும் இக்கிரியையைப் பிதிர் தேவர்கள் பெற்று, இறந்தவர்க்கும் அவரது தலைமுறை முன்னோர்க்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிரர்களைப் படைத்துள்ளார்.





**மாசிகங்கள்:**

இறந்த நாள் முதல் இருபத்தேழாம் நாளின் மேல் மூன்று நாட்களுக்குள் செய்யப்படுவது ஊன மாசிகமாகும். நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்துக்குள் செய்யப்படுவது திரைபட்ச மாசிகமாகும். நூற்றெழுவது நாளின் மேல் பத்து நாட்களுக்குள் செய்யப்படுவது ஊனஷாண் மாசிகமாகும். முந்நூற்று நாற்பத்தைந்தாம் நாளின் மேல் பதினைந்து நாட்களுக்குள் ஆப்திகத்திற்கு முன் செய்யப்படுவது ஊனாப்திக மாசிகமாகும்.

இந்த நான்கு மாசிகங்களும் இரண்டாம் மாதம் முதற் பன்னிரண்டாம் மாதம் வரை இறந்த திதிகளிற் செய்யப்படும் பதினொரு மாசிகங்களுமாக பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டும்.

ஊன மாசிகம், திரைபட்ச மாசிகம், ஊனஷாண் மாசிகம், ஊனாப்திக மாசிகம் என்னும் நான்கு மாசிகங்களையும் வாராதி தோஷங்கள் இல்லாத நாட்களிற் செய்தல் நன்று.

**செய்யத்தகாத நாட்கள்:**

திரிதியை, சதுர்த்தசி, அமாவாசை என்னும் திதிகளிலும், வெள்ளிக்கிழமையிலும், கேட்டை, பூரம், பூரட்டாதி, ஆயிலியம், மூலம், கார்த்திகை முதலான நட்சத்திரங்களிலும், திரிபுஷ்கர யோகம், துவிபுஷ்கர யோகம் என்பவற்றிலும் செய்தலாகாது.

திரிபுஷ்கர யோகமாவது துவிதியை, சப்தமி, துவாதசி என்னும் திதிகளும் கார்த்திகை, உத்தரம், உத்தராடம், புனர்பூசம், விசாகம், பூரட்டாதி என்னும் நட்சத்திரங்களும் ஞாயிறு, செவ்வாய், சனி என்னும் வாரங்களுமாகிய மூன்றும் கூடுவது திரிபுஷ்கர யோகமாகும்.

துவிபுஷ்கர யோகமாவது இம்மூன்றுள் இரண்டு கூடுவதாகும். மற்றைய பதினொரு மாசிகங்களையும் காலதோஷம் பாராது அவ்வத் திதிகளிற் செய்யலாம்.

**சிராத்தம் :**

சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம் எனப்படும். சிரத்தையாவது பற்று, அன்பு. இறந்தவர்களில் அன்பும், பற்றும் உடையவர்களினாலே தான் இக்கிரியை செய்யப்பட வேண்டும். இக்கிரியையின் உயர்நிலை அன்பு ஆகும்.

சிராத்தம் பிதிர் கருமம் என்னும் பொருள் உடையதாய் எல்லாப் பிதிர் கருமங்களையும் குறிப்பது. ஆயினும் இது நம் நாட்டில் ஆட்டைத்திவசம், திவசம் என்பவற்றையே குறிப்பிடுகின்றது. திவசம் திதி எனப்படும்.

**ஆட்டைத் திவசம் :**

ஒருவர் இறந்த ஒரு ஆண்டின் பின் செய்யும் சிராத்தம் ஆப்திகம் அல்லது ஆட்டைத் திவசம் எனவும், அதனையடுத்து ஆண்டு தோறும் அதே திதியில் செய்யப்படுவது வருட சிராத்தம் அல்லது திவசம் எனவும் கூறப்படும்.

**நைமித்திய சிராத்தம் :**

பிதா மாதா முதலாயினோர் இறந்த தினமும் திதியும் வருடந்தோறும் வரும் பொழுது விசுவாசத்தோடு விதிப்படி செய்வது நைமித்திய சிராத்தம் எனப்படும். எத்திதியில் இறந்தாரோ அத்திதியில் சிராத்தம் செய்தல் உத்தமமாம். திதி தெரியாவிடின், அந்த மாத அமாவாசை அல்லது அட்டமியில் செய்யலாம். இவைகளில் எதுவும் தெரியாதோர் புரட்டாதி மாதத்தில் வரும் மாளயபக்க நாட்களில் செய்து கொள்ளலாம். (புரட்டாதி மாதத்து அபரபக்கத்துப் பிரதமை முதல் அமாவாசை வரையான காலம் மாளயபக்க காலமாகும்).

**தீர்த்த சிராத்தம் :**

மாதந்தோறும் அமாவாசையில் பிதா மாதாக்களின் பொருட்டுச் செய்யப்படும் பிதிர் தேவர்களின் தாகசாந்திக் கருமம்,





அமாவாசை, சூரிய கிரணம், சந்திர கிரணம், வியதீபாத யோகம், உத்தராயணம், சித்திரை வருடப்பிறப்பு, மாதப்பிறப்பு, கார்த்திகை மாத சுக்கிலபக்க நவமி, புரட்டாதி மாதக் கிருஷ்ணபக்ஷ திரியோதசி என்னும் இந்நாட்களில் புண்ணிய தீர்த்தத்தில் நீராடிப் பிதிர் தர்ப்பணம் செய்து சிவனடியாரோடு உண்ணல் தீர்த்த சிராத்தம் எனப்படும்.

நீராடுபவர்களுடைய பாவங்களை நீக்கி, அவர்களுக்கு வீடுபேறு கொடுப்பதற்காகவும், புண்ணிய காலங்களிலே தென்புலத் தாரைக் குறித்துத் தர்ப்பணம் முதலியவற்றைச் செய்து அவர்களைப் பிறவிக் கடலினின்றும் கரையேற்றுவதற்காகவும் கருணாநிதியாகிய சிவபெருமான் தமது வடிவையே தீர்த்த வடிவமாக்கியுள்ளார்.

**அமாவாசை சிராத்தம் :**

மனிதர்களுடைய ஒரு மாதம் பிதிர்களுக்கு ஒரு நாளாம். (சுக்கில பக்கம் இரவும், கிருஷ்ண பக்கம் பகலுமாகும்) ஆதலால் மாதந்தோறும் வரும் அமாவாசையில் தர்ப்பணம் செய்து விரதம் அனுட்டிக்க வேண்டும்.

**எள்ளும் தண்ணீரும் இறைத்தல் :**

தருப்பணம் திருப்திக்காகச் செய்யப்படுவது. தருப்பையைக் குறுக்காகப் பிடித்து அத்தருப்பை மூலத்திலிருந்து எள்ளுக் கலந்த நீரைச் சுட்டுவிரல் மூலம் விழச் செய்யப்படுவது. இந்நேரம் தலை முறையான பிதிர்கள் பெயர் சொல்லிச் செய்யப்படும். தருப்பண முடிவிலே, "என் குலப் பிதிர்களே, பூமியில் விடப்பட்ட இந்த நீரினால் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள்" என்று சொல்லித் தருப்பை எள்ளுடன் தீர்த்தத்தில் போடப்படும்.

**கயா சிராத்தம் :**

கயா காசியிலுள்ள தீர்த்தம். இதில் பிதிர்களை எண்ணிச் சிராத்தம் செய்யின் வேறு சிராத்தம் செய்ய வேண்டியதில்லை என ஞான நூல்கள் கூறும். இச்சிராத்தம் பிதிர்களுக்குத் திருப்தியைக்

கொடுப்பதுடன், போக மோட்சங்களையும் கொடுக்கும். கயா சிராத்தத்தால் ஏழு கோத்திரத்துள்ள நூற்றொரு குலமும் விருத்தி யாகும். இப்படியான வேறும் பல புண்ணிய தீர்த்தங்கள் சிராத்தம் செய்வதற்கு உண்டு. அவை, அயோத்தி, மதுரை, மாயை, காஞ்சி, அவந்தி, துவாரகை, திருக்கேதீச்சரம், திருகோணமலை, கன்னியா, நீருற்றுக்கள், கீரிமலை, முன்னேஸ்வரம் போன்றவையாகும்.

**சிராத்தம் செய்யும் இடம்:**

இறந்தவர் வீடு, திருநந்தவனம், மலை, திருக்கோயில், புண்ணிய தீர்த்தக்கரை, குருவின் மனை போன்ற கோமயத்தினால் சுத்திசெய்யப்பட்ட இடங்கள் சிறப்பானவை.

**சிராத்தத்துக்குரிய பொருட்கள்:**

எள், நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுநெய், பசுப்பால், பசுத்தயிர், எண்ணெய், சிகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், தேங்காய், இளநீர், புடோலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, சுக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

**சிராத்தத்திற்கு ஆகாத பொருட்கள்:**

கடலை, பீர்க்கங்காய், நீற்றுப்பூசணிக்காய், முருங்கைக்காய், அத்திக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொல்லை, எருமைப்பால், எருமைத்தயிர் முதலியன.

**பொருள் இல்லாதவர் சிராத்தம்:**

சிராத்தத்திற்குப் பொருள் இல்லாதவர் காய்கனி, கிழங்கு, எள்ளு இவைகளையேனும்,சற்பாத்திரப் பிராமணருக்குக் கொடுத்துப்





பிரதட்சண நமஸ்காரம் செய்து திலதருப்பணம் பண்ணித் தான் திருப்தியாக உணவு செய்தல் வேண்டும் தருப்பணம் செய்வதற்கும் வல்லமை இல்லாதிருப்பின் பசுக்கூட்டங்களுக்குப் புல்லைக் கொடுத்தல் மேலாம்.

**சிராத்தத்திற்கு உபயோகிக்கும் பத்திரம் -(மலர்):**

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவட்டை, எட்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

**சிராத்தத்திற்கு ஆகாதவை:**

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியன.

**சிராத்த தினத்திலே செய்யத்தக்க புண்ணிய காரியங்கள்:**

சற்பாத்திரர்களுக்கு அன்னதானம், ஆடை வகை முதலியன வழங்கலும், திருக்கோயிலிலே கடவுளுக்கு அபிடேகம், பூசை, திருவிளக்கேற்றுதல் முதலியனவுமாகும்.

**சிராத்த தினத்திலே செய்யத்தகாதன:**

தயிர் கடைதல், நெல் குத்துதல், நெய் முதலிய பொருட் களைக் கொடுத்தல், வாங்குதல், கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல்.

**சிராத்தம் கொடுக்கத்தக்க பாத்திரர்:**

பிதிர்தேவர் பொருட்டு இறந்தவர் பெற்ற தீட்சையேனும் அதனின் மேலான தீட்சையேனும் பெற்ற சற்பாத்திரர்களுக்குச் சிராத்தம் கொடுக்கலாம்.

வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து பாவங்களை விலக்கித் தருமங்களைக் கைக்கொண்டு கடவுளை மெய்யன்போடு வழிபடு பவரும், தம்மைப் போலவே பிறரும் நன்னெறியில் நின்று உய்ய வேண்டுமென்று எண்ணி அவர்களுக்கு அந்நெறியை உபதேசிப்

பவருமானோர் சற்பாத்திரராவர். அசற்பாத்திரருக்கு சிராத்தம் கொடுத்தலாகாது. வேத சிவாகமங்களைக் கற்று அதன்வழி நில்லாதோரும், பிறர்க்கு அந்நெறியைக் கூறி வழிப்படுத்தாதோரும் சிராத்தத்திலே அன்புடன் கொடுத்தவைகளைத் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளாத வருமானோர் அசற்பாத்திரராவர். இவர்களுக்குச் சிராத்தம் கொடுத்தலாற் பலன் உண்டாவதில்லை.

**சிராத்தம் நடைபெறும் போது செய்யத்தக்கன:**

வேதபாராயணஞ் செய்தல், தமிழ் வேதங்களையும், புராணங்களையும் ஓதுதல், இவை பித்ருகளுக்கு மிகத் திருப்தியானவையாம்.

**உபசாரம்:**

சிராத்த முடிவில் ஆசாரியருக்கு உபசாரம் செய்து அவரை உபசரித்து வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரம் செய்யும் போது அஃது ஆசாரியருக்கென்று எண்ணிக் கொடுத்தலாகாது. பிதிர் தேவர்களுக்கென்றே எண்ணிக் கொடுத்தல் வேண்டும்.

**சிராத்த காலம்:**

இராக்காலத்திலும், சூரியோதயம் முதல் ஆறு நாழிகை வரையுள்ள காலைப் பொழுதிலும் இராக்காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு நாழிகையும் பகற்காலத்தில் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு சந்தியா காலமும் தவிர்த்து ஏனைய நேரங்கள் பிதிர் சிராத்தத்திற்கு உரியனவாகும்.

**உணவு:**

சிராத்த காலங்களிலே அதிதிகளுக்கு அன்னங் கொடுத்தல் பெரும் புண்ணியமாகும். பரமசிவனும், பார்வதி அம்மையும், முருகக் கடவுளும், திருமாலும், பிரமாவும், தருமதேவதையுமாகிய சகலரும் கூடி அதிதி வடிவாய் வருவரென்று மெய்நூல்கள் கூறுகின்றன.





# இலக்கணத் தேறல்

## சுருக்க வினா – விடை

**(சகல வகுப்புகளுக்குமுரியது)**


**ஆக்கம்:**

S. B. **காசிநாதன்**

Sp. Trd. (Tamil) B.A. (cey), Dip. in. Ed. M.Ed.

**ஆசிரியர்: சென். ஜோண்ஸ் கல்லூரி**

## தமிழ் நெடுங்கணக்கு




## எழுத்துச் சீர்திருத்தம்

| பழையவை | புதியன |
|---|---|
| லை | லை |
| ளை | ளை |
| னை | னை |
| ணை | ணை |
| றா | றா |
| னா | னா |
| ணா | ணா |
| றொ | றொ |
| னொ | னொ |
| ணொ | ணொ |
| றோ | றோ |
| னோ | னோ |
| ணோ | ணோ |

20. வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்கள் யாவை?

| | |
|---|---|
| வல்லெழுத்துக்கள் | க், ச், ட், த், ப், ற் |
| மெல்லெழுத்துக்கள் | ங், ஞ், ண், ந், ம், ன் |
| இடையெழுத்துக்கள் | ய், ர், ல், வ், ழ், ள் |

21. சுட்டெழுத்துக்கள் எவை?
அ, இ, உ, என்னும் மூன்றும் மொழிக்கு முதலில் சுட்டுப் பொருளில் வரும்போது சுட்டெழுத்தாகும்.'

22. சுட்டெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
இரண்டு வகைப்படும் 1) அகச்சுட்டு, 2) புறச்சுட்டு

23. அகச்சுட்டுக்கு உதாரணம் தருக.
அவன், இவன், உவன்

24. புறச்சுட்டுக்கு உதாரணம் தருக.
அவ்வீடு, இவ்வீடு, உவ்வீடு

25. வினா எழுத்துக்கள் பற்றிக் கூறும் நன்னூல் வரிகளைக் குறிப்பிடுக.
"எ, யா முதலும் ஆ, ஓ, ஈற்றும் ஏ இருவழியும் வினாவாகுமே"

26. வினாவெழுத்துக்கள் யாவை?
எ மொழிக்கு முதலிலும் ஆ, ஓ மொழிக்கு இறுதியிலும் ஏ மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வினாப்பொருளில் வரும் வினாப்பொருளில் வரும் போது வினாவெழுத்துக்களாகும். யா என்னும் உயிர்மெய் யெழுத்து மொழிக்கு முதலில் வினாப் பொருளில் வரும்போது வினாவெழுத்தாகும்.

27. எழுத்துக்கள் ஒலிக்கும் கால அளவை எவ்வாறு கூறுவர்?
மாத்திரை என்பர்.





28. மாத்திரை என்றால் என்ன?
கை நொடிப் பொழுது அல்லது கண்ணிமைப்பொழுது

29. குற்றெழுத்துக்கு மாத்திரை எவ்வளவு?
ஒன்று

30. நெட்டெழுத்துக்களுக்கு மாத்திரை எத்தனை?
இரண்டு

**மாத்திரைகள்**

| எழுத்துக்கள் | மாத்திரை அளவு |
|---|---|
| 1. உயிர்க் குற்றெழுத்து (குறில்) | 1 மாத்திரை |
| 2. உயிர்மெய் குற்றெழுத்து | 1 மாத்திரை |
| 3. உயிர் நெட்டெழுத்து (நெடில்) | 2 மாத்திரை |
| 4. உயிர்மெய் நெட்டெழுத்து | 2 மாத்திரை |
| 5. மெய் எழுத்து | ½ மாத்திரை |
| 6. ஆய்த எழுத்து | ½ மாத்திரை |
| 7. குற்றியலுகரம் | ½ மாத்திரை |
| 8. குற்றியலிகரம் | ½ மாத்திரை |
| 9. ஐகாரக் குறுக்கம் | 1 ½ மாத்திரை |
| 10. ஔகாரக் குறுக்கம் | 1½ ஐ விடக்குறைவு |
| 11. மகரக் குறுக்கம் | ½ ஐ விடக்குறைவு |
| 12. ஆய்தக் குறுக்கம் | ½ ஐ விடக்குறைவு |
| 13. ஒற்றளபெடை | 1 மாத்திரை |
| 14. உயிரளபெடை | 3 மாத்திரை |

31. உயிரளபெடையாவது யாது?
தனது மாத்திரை நீண்டு ஒலிக்கின்ற உயிர்நெட்டெழுத்து ஏழுமாம்.

32. ஒற்றளபெடையாவது யாது?
தனது மாத்திரையில் நீண்டு ஒலிக்கின்ற மெய்யெழுத்தும் ஆய்த எழுத்துமாம்.

33. குற்றியலிகரமாவது யாது?
தனது மாத்திரையில் குறைந்தொலிக்கின்ற இகரம் (இ) குற்றியலிகரம் ஆகும்.

34. குற்றியலுகரமாவது யாது?
தனது மாத்திரையில் குறைந்தொலிக்கின்ற உகரம் (உ) குற்றியலுகரம் ஆகும்.

35. இது பற்றி நன்னூல் என்ன கூறுகிறது?
தனிக்குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களுக்கு பின்னே மொழிகளின் இறுதியில் வல்லின மெய்களின் மேல் ஏறிவரும் உகரம் குற்றியலுகரமாகும்.

36. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
ஆறு வகைப்படும்.

1) நெடித்தொடர்க் குற்றியலுகரம்: காசு, நாகு
2) ஆய்தத் தொடர் குற்றியலுகரம்: எஃகு, அஃது
3) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்: வரகு, பலாசு
4) வன்றொடர்க் குற்றியலுகரம்: கொக்கு, மேற்கு
5) மென்றொடர்க் குற்றியலுகரம்: பண்பு, மஞ்சு
6) இடைத்தொடர்க் குற்றியலுகரம்: மார்பு, சால்பு

37. குற்றியலுகரத்துக்கு உதாரணம் தருக.
நாகு, பஞ்சு, அஃது

38. குற்றியலிகரத்துக்கு உதாரணம் தருக?
நாகு + யாது = நாகியாது, எஃகு + யாது = எஃகியாது

39. முற்றியலுகரம் என்றால் என்ன?
தனிக்குற்றெழுத்துக்குப்பின் வல்லின மெய்களில் ஏறி நிற்கும் உகரமும் மெல்லின மெய்களிலும் இடையின மெய்களிலும் ஏறி நிற்கும் உகரமும் முற்றியலுகரமாகும்.
உ+ம்: பானு, நகு, நெல்லு, கதவு





40) மொழிக்கு முதலில் வரும் முதனிலை எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?
இருபத்தொன்று
உயிர்: 12 (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)
உ+ம்: அலை, ஆடு, இலை, ஈ, உடு, ஊசி, எரு, ஏடு, ஐயர், ஒலி, ஓலை, ஔவை.

மெய்: 9 (க், ச், த், ந், ப், ம், ய், வ், ஞ்)
உ+ம்: கடி, சதி, தடி, நரை, படி, மண், யானை, வடு, ஞமலி. (மயில்)

41. மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களின் எண்ணிக்கை என்ன? அவை எவை? நூற்றி இரண்டு.

| | | |
|---|---|---|
| 1) | உயிர் | 12 |
| 2) | உயிர்மெய் (12 x6) | 72 |
| 3) | யகரம் | 8 |
| 4) | வகரம் | 6 |
| 5) | ஞகரம் | 4 |
| | | 102 |

42. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்கள் எத்தனை? அவை எவை? இருபத்திரெண்டு.
எகரம் ஒழிந்த பதினொரு உயிரும் வல்லினமும் "ங" கர்மும் ஒழிந்த பதினொரு மெய்யும்.

உயிர்: 11 (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)
உ+ம்: சில, பலா, கிளி, தீ, வீடு, பூ, அவனே, கை, நொ, போ, வௌ


மெய்: 11 (ஞ் ண், ந், ம், ன், ய், ர், ல், வ, ழ், ள்)
உ+ம்: உரிஞ், கண், வெரிந், கரம், மண், நாய், வேர், கல், தெவ், யாழ், வாள்.

43. இடைநிலை மெய்மயக்கம் எத்தனை வகை? அவை எவை?
இரண்டு வகை
உடனிலை மெய்மயக்கம், வேற்றுநிலை மெய்மயக்கம்.

44. உடனிலை மெய்மயக்கம் என்றால் என்ன?
தம்மோடு தாம் அடுத்து வந்து மயங்குவது உடனிலை மெய்மக்கம் ஆகும். ர, ழ் தவிர்ந்த ஏனைய பதினாறு மெய்களும் தம்மொடு தாம் மயங்கும்.
உ+ம்: க் ச், த், ப், ங்,ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன்.


45. வேற்றுநிலை மெய்மயக்கம் என்றால் என்ன?
தம்மோடு பிற மெய்கள் அடுத்து வந்து மயங்குதல் வேற்றுநிலை மெய்மயக்கம் எனப்படும். க், ச், த், ப், தவிர்ந்த ஏனைய பதினாலு மெய்கள் தம்மோடு பிற மெய்கள் மயங்கும்.
உ+ம்: ர், ழ், ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன்

46. எழுத்துச் சீர்திருத்தத்தில் மாற்றம்பெற்ற எழுத்துக்கள் எத்தனை? அவை எவை?
13, ளை, லை, னை, ணை, று, ணா, னா, றொ, ணொ, னொ, றோ, ணோ, னோ








## சொல்

46. சொல் என்பது என்ன?
ஓரெழுத்து அல்லது இரண்டு முதலிய பல எழுத்துக்களால் ஆக்கப்பட்டு பொருளைத் தருவது சொல்லாகும்.

47. சொல்லை எவ்வாறு அழைக்கலாம்?
பதம் என அழைக்கலாம்.

48. சொற்கள் எத்தனை வகைப்படும்?
**பகுபதம், பகாப்பதம்** என இருவகைப்படும்.

49. பகாப்பதம் என்றால் என்ன?
பிரிக்கமுடியாத இயல்பை உடைய பதம் **பகாப்பதம்**

50. பகாப்பதம் எத்தனை வகைப்படும்?
**பெயர், வினை, இடை, உரி** என நான்கு வகைப்படும்.

51. பகாப்பதத்திற்கு உதாரணம் தருக.
**பெயர்ப்பகாப்பதம்:** பொன், மரம்
**வினைப்பகாப்பதம்:** நட, உண்
**இடைப்பகாப்பதம்:** கொல், ஓ
**உரிப்பகாப்பதம்:** நனி, தவ

52. பகுபதமாவது யாது?
**பகுக்கப்படும் இயல்பையுடைய** சொல் பகுபதமெனப் படும்.

53. பகுபதம் எத்தனை வகைப்படும்?
**பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம்** என இருவகைப் படும்.

54. வினைப்பகுபதங்கள் யாவை?
தெரிநிலை வினைப்பகுபதம், குறிப்புவினைப் பகுபதம் என இரு வகைப்படும்.

55. பகுபத உறுப்புகள் யாவை? உதாரணம் தருக.
**பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்** என்னும் ஆறுமாம். உ+ம் நடந்தனன்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | சந்தி<br>↓ | | | | | | |
| நட | + | த் | + | த் | + | அன் | + | அன் |
| ↓ | | ↓ | | ↓ | | ↓ | | ↓ |
| பகுதி | | ந்<br>விகாரம் | | இடைநிலை | | சாரியை | | விகுதி |





56. பகுதி ஆவது யாது?
பகுபதங்களின் முதலிலே நிற்கும் பகாப்பதமாகும்.

57. விகுதி ஆவது யாது?
பகுபதங்களின் இறுதியில் நிற்கும் பகாப்பதமாகும்.

58. இடைநிலை என்றால் என்ன?
பகுபதங்களிலே பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் நிற்கும் இடைப்பதங்களாகும்.

59. சாரியை என்றால் என்ன?
இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் நிற்பது சாரியை

60. சந்தி என்றால் என்ன?
புணரியலிற் சொல்லப்படும் தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரங்கள் (பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் நிற்பது)

61. விகாரமாவது யாது?
விகாரமாவது மெல்லின மெய்யை வல்லின மெய்யாக்கலும், வல்லின மெய்யை மெல்லின மெய்யாக்கலும், குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தை குற்றெழுத்தாக்கலும், இல்லாத எழுத்தை விரித்தலும், உள்ள எழுத்தைத் தொகுத்தலுமாம்.

62. சொற்களின் வகைகள் யாவை?
பெயர், வினை, இடை, உரி என நான்கு வகைப்படும்.

63. பெயர்ச்சொல் என்றால் என்ன?
ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல்.

64. பெயர்ச் சொல்லின் சிறப்பிலக்கணம் என்ன?
வேற்றுமை ஏற்றல் ஆகும்.

65. வினைச் சொல்லின் சிறப்பிலக்கணம் என்ன?
காலம் காட்டுதல் ஆகும்.

66. தமிழில் உள்ள சிறப்பு எழுத்துக்கள் யாவை?
ஃ, ழ, ற

# எழுத்து

1. மொழி என்பது யாது?
எமது உள்ளக் கருத்தை அறிவிக்கும் கருவி மொழியாகும்.

2. எழுத்தென்பது யாது?
சொல்லுக்கு முதற்காரணமாகிய ஒலி வடிவம் எழுத்தாகும்.

3. இதுபற்றிக் கூறும் நன்னூல் வரி யாது?
'மொழி முதற் காரணமாம் அசைத்திரளொலி எழுத்து"

4. எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
நான்கு வகைப்படும்.

5. அவை யாவை?
உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்எழுத்து, ஆய்த எழுத்து.

6. உயிர் எழுத்துக்கள் யாவை? உயிர் பன்னிரெண்டு
அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ

7. மெய் எழுத்துக்கள் யாவை? மெய் பதினெட்டு
க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

8. உயிர்மெய் எழுத்துக்கள் யாவை?
க, கா - வரி தொடக்கம், ன, னா - வரி வரை
பன்னிரெண்டு உயிரும் பதினெட்டு மெய்யும் சேர்ந்து வரும் இருநூற்றுப் பதினாறு எழுத்துக்கள்.

9. உயிர் மெய் எழுத்துக்களுக்கு உதாரணம் தருக.
க் + அ = க    ச் + ஆ = சா    ட் + உ = டு
ல் + அ = ல    ழ் + ஓ = ழோ    ப் + ஐ = பை

10. இயல்பு கருதி எழுத்துக்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
முதல்எழுத்துக்கள், சார்பெழுத்துக்கள் என இரு வகையாகும்.





11. முதலெழுத்தாவது யாது?
ஒன்றையும் சாராது தானாக இயங்கும் முதன்மை எழுத்துக்கள் முதலெழுத்துக்கள் ஆகும்.

12. சார்பெழுத்தாவது யாது?
தானாக இயங்காது வேறொன்றைச் சார்ந்து வருவது சார்பெழுத்தாகும்.

13. முதலெழுத்துக்கள் யாவை?
உயிர் பன்னிரெண்டு, மெய் பதினெட்டுமாக முப்பதாகும்.

14. சார்பெழுத்துக்கள் யாவை?
உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் என்பனவாகும்.

15. ஆய்த எழுத்தாவது யாது?
சொற்களின் நடுவில் வரும் மூன்று புள்ளி வடிவுடையதான எழுத்து (ஃ)

16. உயிர் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
குற்றெழுத்து, நெட்டெழுத்து என இருவகைப்படும்.

17. குற்றெழுத்துக்கள் யாவை?
அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து குற்றெழுத்தாகும்.

18. நெட்டெழுத்துக்கள் யாவை?
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்துக்கள்

19. மெய் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படும்.

67. பெயர்ச்சொல் எத்தனை வகைப்படும்?
இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப்பெயர் என மூன்று வகைப்படும்.

68. இடுகுறிப்பெயராவது யாது?
காரணம் இன்றி ஒரு பொருளுக்கு வழங்கி வரும் பெயர்

69. காரணப் பெயராவது யாது?
ஏதாவது காரணத்தால் அப்பொருளை உணர்த்தி வரும் பெயர்

70. காரண இடுகுறிப் பெயர் யாது?
காரணங்கருதியபோது காரணத்தை உடைய பல பொருட்களுக்கும், காரணம் கருதாதபோது இடுகுறியளவாய் தனிப் பொருட்களுக்கும் வழங்கும். உ+ம்: நாற்காலி

71. இப்பெயர்கள் மேலும் எவ்வாறு பிரிக்கப்படும்?
பொதுப்பெயர், சிறப்புப்பெயர்

72. பொதுப் பெயர் என்றால் என்ன?
பல பொருட்களுக்குப் பொதுவாக வழங்கிவரும் சொல்
உ+ம்: மரம், பறவை

73. சிறப்புப் பெயர் என்றால் என்ன?
ஒரு பொருளுக்கே சிறப்பாக வழங்கி வருவது
உ+ம்: தென்னை, கிளி

74. ஆறு வகைப் பெயர்களும் யாவை?

| | |
|---|---|
| பொருட்பெயர்: | கந்தன், மேசை |
| இடப்பெயர்: | நயினாதீவு, முற்றம் |
| காலப்பெயர்: | கோடை, மணி, நிமிடம் |
| சினைப்பெயர்: | இலை, விரல் |
| குணப்பெயர்: | வெள்ளை, அன்பு |
| தொழிற்பெயர்: | படித்தல், இருத்தல் |





75. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?
வினைச்சொல்லானது பெயர்த்தன்மைப்பட்டு வேற்றுமை உருபு ஏற்று வருதலாகும்.
உ+ம்: வென்றானை வென்றான்

76. தொழிற் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?
தொழிற்பெயர் தொழிலுக்கே பெயராக வந்து பெரும்பாலும் காலம் காட்டாது படர்க்கை இடத்துக்குரியதாகும். வினையாலணையும் பெயர் தொழிலை உடைய பொருளுக்கே பெயராய் வந்து முக்காலமும் காட்டி மூன்று இடத்துக்கும் வரும்.

77. தன்மைப் பெயர் என்றால் என்ன?
தன்னை (தனது) இடத்தைக் குறிப்பது.
உ+ம்: நான், நாங்கள்

78. முன்னிலைப் பெயர் என்றால் என்ன?
முன்னிலை (முன்) இடத்தைக் குறிப்பது
உ+ம்: நீ, நீங்கள்

79. படர்க்கைப் பெயர் என்றால் என்ன?
படர்க்கை (தூரத்தே உள்ளவற்றை) இடத்தைக் குறிப்பது
உ+ம் : அவள், அவர்கள், ரோஜிதா

80. இருதிணை மூவிடத்துக்கும் பொதுவாக வரும் பெயர் யாது?
எல்லாம்

81. திணை என்றால் என்ன?
திணை என்று பொருட்களின் (சாதி) பிரிவைக் குறிக்கும்.

82. அவை யாவை?
உயர்திணை, அஃறிணை
(மக்கள், தேவர், நரகர் - உயர்திணை, ஏனையவை - அஃறிணை)

83. ஐம்பாலும் எவை?
ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

84. உயர்திணையில் உள்ள பால்கள் எவை?
ஆண்பால், பெண்பால், பலர்பால்

85. அஃறிணையில் உள்ள பால்கள் எவை?
ஒன்றன்பால், பலவின்பால்

86. ஆகுபெயர் என்றால் என்ன?
ஒரு பொருளின் பெயர் அதனோடு தொடர்புடைய வேறொரு பொருளுக்கு தொன்றுதொட்டு வழங்கிவருவது ஆகுபெயர்

87. ஆகுபெயர் எத்தனை வகைப்படும்?
பதினாறு வகைப்படும்.

88. அவை யாவை?
1) பொருளாகு பெயர் - **தாமரை மலர்ந்தது**
2) இடவாகு பெயர் - **இடைக்காடு வென்றது**
3) காலவாகு பெயர் - **கார்த்திகை பூத்தது**
4) சினையாகு பெயர் - **வெற்றிலை நட்டான்**
5) குணவாகு பெயர் - **வெள்ளை அடித்தான்**
6) தொழிலாகு பெயர் - **வற்றல் உண்டான்**
7) எண்ணளவை ஆகுபெயர் - **ஐந்து கிடைத்தது**
8) எடுத்தலளவை ஆகுபெயர் - **ஒரு கிலோ வாங்கி வா**
9) முகத்தலளவை ஆகுபெயர் - **ஒரு லீற்றர் போதும்**
10) நீட்டலளவை ஆகுபெயர் - **முக்கால் மீற்றர் போதும்**
11) சொல்லாகு பெயர் - பாடலுக்கு **உரை வகுத்தார்.**
12) தானியாகு பெயர் - **விளக்கு முறிந்தது**
13) கருவியாகு பெயர் - **திருவாசகம் ஓதினார்**
14) கருத்தாவாகு பெயர் - **திருவள்ளுவம் படித்தான்**
15) உவமையாகு பெயர் - **மலர்க்கொடி வந்தாள்**
16) காரியாகு பெயர் - **அலங்காரம் கற்றான்**

89. வேறாக வழங்கும் மூன்று ஆகுபெயர்கள் எவை?
அடையடுத்த ஆகுபெயர் - **வெற்றிலை நட்டான்**
இருமடி ஆகுபெயர் - **கார் பொழிந்தது**
மும்மடி ஆகுபெயர் - **கார் அறுத்தான்**





90. வேற்றுமை என்றால் என்ன?
உருபுகள் மூலம் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை

91. வேற்றுமை எத்தனை வகைப்படும்?
முதலாம் வேற்றுமை முதல் எட்டாம் வேற்றுமை ஈறாக எட்டு வகைப்படும்.

92. வேற்றுமை உருபுகள் யாவை?

| வேற்றுமை | உருபு | பொருள் | சொல்லுருபு | உதாரண வசனம் |
|---|---|---|---|---|
| 1ம் வேற்றுமை | - | எழுவாய் | ஆனவன் என்பான் ஆவான் | கண்ணன் வந்தான் இரமனாவனன் வந்தான் |
| 2ம் வேற்றுமை | ஐ | செயப்படுபொருள் | - | கஜன் மரத்தை வெட்டினான் |
| 3ம் வேற்றுமை | ஆல், ஆன் | கருவி,கருத்தா | கொண்டு | வாளால் வெட்டினான். வாள் கொண்டு வெட்டினான். |
| | ஒடு, ஓடு | உடனிகழ்ச்சி | உடன் | இராமனுடன் சீதை சென்றாள். |
| 4ம் வேற்றுமை | கு | கோடல், நட்பு, பகை தகுதி, முறை முதற்காரணம் நிமித்தகாரணம் | ஆக பொருட்டு நிமித்தம் | பாம்புக்குப் பகை கீரி கூலிக்கு வேலை செய்தான் |
| 5ம் வேற்றுமை | இல், இன் | நீங்கல் எல்லை ஒப்பு ஏது | நின்று நின்றும் இருந்து இருந்தும் | பாடசாலையில் விலகினான் பாடசாலையினின்றும் விலகினான் |
| 6ம் வேற்றுமை | அது, ஆது | உடமை (கிழமை) தற்கிழமை பிறிதின்கிழமை | உடைய | கண்ணனது புத்தகம் கண்ணனுடைய புத்தகம் |
| 7ம் வேற்றுமை | கண், இல் | இடப்பொருள் | மேல், கீழ் உள் | மரத்தின்கண் இருந்த கூடு மரத்தின் மேல் இருந்த கூடு |
| 8ம் வேற்றுமை | - | விளிப்பொருள் | - | குழந்தாய் இங்கே வா |

93. இருதிணைப் பொதுப் பெயருக்கு உதாரணம் தருக.
நொண்டி, குருடு, தாய், தந்தை

94. உயர்திணை இருபாற் பொதுப் பெயருக்கு உதாரணங்கள் தருக.
தொழிலாளி, அதிபர், சட்டத்தரணி, ஜனாதிபதி

95. அஃறிணை இருபாற் பொதுப் பெயருக்கு உதாரணம் தருக.
மரம்

96. நாற் கணம் என்பது யாது?
உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம்

97. வினைச் சொல் என்றால் என்ன?
ஒன்றினது தொழிலை (புடைப்பெயர்ச்சியை) உணர்த்தும் சொல்

98. வினைச் சொல் எத்தனை வகைப்படும்?
வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என மூன்று வகைப்படும்.

99. வினைமுற்று என்றால் என்ன?
பால்காட்டும் விகுதிகளைப் பெற்று பொருள் முற்றுப் பெற்று நிற்கும் வினைச் சொல் வினைமுற்று எனப்படும்.

100. பெயரெச்சம் என்றால் என்ன?
பால் காட்டும் விகுதிகளைப் பெறாது குறைச்சொல்லாய் பெயரைக் கொண்டு முடியும் வினையாகும்.

101. வினையெச்சம் என்றால் என்ன?
பால்காட்டும் விகுதிகளைப் பெறாது குறைச்சொல்லாய் வினையைக் கொண்டு முடியும் வினை வினையெச்சமாகும்.

102. காலங்கள் யாவை?
இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகும்.





103. இறந்த காலம் என்றால் என்ன?
செயல் நடந்து முடிந்ததைக் குறிக்கும்.

104. நிகழ்காலம் என்றால் என்ன?
செயல் (முற்றுப்பெறாது) நடக்கின்றதைக் குறிக்கும்.

105. எதிர்காலம் என்றால் என்ன?
இனிமேல் நடக்கப்போகும் செயலைக் குறிப்பது.

106. தெரிநிலை வினை என்றால் என்ன?
தொழிலும் காலமும் வெளிப்படையாக தெரிய நிற்பது தெரிநிலை வினையாகும். இது செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறையும் உணர்த்தும்.

107. குறிப்பு வினை என்றால் என்ன?
செயலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டாமல் சொல்வோனது குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினையாகும்.

108. உடன்பாட்டு வினையாவது யாது?
தொழிலினது நிகழ்ச்சியை உணர்த்தும் வினையாகும்.

109. எதிர்மறை வினையாவது யாது?
தொழில் நிகழாமையை உணர்த்தும் வினை எதிர்மறை வினையாகும்.

110. ஏவல் வினைமுற்றென்பது யாது?
கட்டளைப் பொருளில் வரும் வினைமுற்று ஏவல் வினைமுற்றாகும்.

111. வியங்கோள் வினை முற்றுக்களாவன யாவை?
க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகள் இறுதியிலுடைய வினைச் சொற்கள் ஆகும். இவை வாழ்த்துதல், வைதல், வேண்டல், கட்டளையிடல் ஆகிய பொருள்களில் வரும்.

112. இருதினை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாக வரும் வினைகள் யாவை?
வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்றும், வினைக்குறிப்பு முற்றுச் சொற்களும் யார் என்னும் வினாவினைக் குறிப்பு முற்றுச் சொல்லும், வியங்கோள் வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் வரும்.

113. தெரிநிலைப் பெயரெச்சங்கள் எவை?
"செய்த" என்னும் வாய்ப்பாட்டு இறந்தகால வினையெச்சமெனவும், "செய்கின்ற" என்னும் வாய்ப்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சமெனவும். "செய்யும்" என்னும் வாய்ப்பாட்டு எதிர்காலப் பெயரெச்சமெனவும் மூவகைப் படும்.

114. தெரிநிலை வினையெச்சங்கள் எவை?
"செய்து" என்னும் வாய்ப்பாட்டு இறந்தகால வினையெச்சமெனவும், "செய்ய" என்னும் வாய்ப்பாட்டு நிகழ்காலத்துக்குரிய வினையெச்சமெனவும் "செயின்" என்னும் வாய்ப்பாட்டு எதிர்கால வினையெச்சமெனவும் மூவகைப்படும்.

115. தெரிநிலை வினையெச்சங்கள் எவ்வகையில் பிரிக்கப் பட்டுள்ளன?
செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாதவினை, தன்வினை, பிறவினை, செய்வினை, செயப் பாட்டுவினை என ஆறு வகைப்படும்.

116. செய்வினை என்றால் என்ன?
கருத்தாவின் தொழிலை நேரே உணர்த்தும் வினை செய்வினை எனப்படும்.
உ+ம்: பகைவர் கோட்டையை உடைத்தனர்.





117. செயப்பாட்டு வினையாவது யாது?
கருத்தா செய்யும் தொழிலை செயப்படுபொருள் அடை வதைக் காட்டும் வினை செயப்பாட்டுவினை எனப்படும்.
உ+ம்: மாளிகை அரசனால் கட்டப்பட்டது

118. செயப்படுபொருள் குன்றிய வினையாவது யாது?
இது செயப்படுபொருள் பெறாத வினையாகும்.

119. செயப்படுபொருள் குன்றா வினையாவது யாது?
செயப்படுபொருளைப் பெற்ற வினை செயப்படுபொருள் குன்றா வினை எனப்படும்.

120. இடைச்சொல் என்றால் என்ன?
தனித்து வராமல் பெயரையும், வினையையும் சார்ந்து வரும் சொல்லாகும்.

121. இடைச்சொல் வகைகளில் சில கூறுக.

| | |
|---|---|
| வேற்றுமை உருபுகள்: | ஐ, ஆல், கு |
| இடைநிலை உருபுகள்: | கின்று, த், ட், இன் |
| சாரியை உருபுகள்: | அம், அத்து |
| விகுதி உருபுகள்: | அன், அள், ஆர் |
| உவமை உருபகள்: | போல, புரைய |
| தத்தம் பொருள் உணர்த்துவன: | ஏ, ஓ, உம் |
| ஒலி, அச்சம், விரைவு: | கடகடென, துண்ணென |
| இசை நிறை: | ஓடு, தெய்ய, ஏ |
| அசை நிலை: | ஏ, மற்று, கொல் |
| சுட்டுக்கள்: | அ, இ, உ |
| வினாக்கள்: | ஆ, ஓ |

122. உரிச்சொல் என்றால் என்ன?
பண்பை உணர்த்தி பெயர் வினைகட்கு (பொருட்டு) உரிமை பூண்டு நிற்கும் சொல்லாகும்.
உ+ம்: கூர்இருள், சாலச்சிறப்பு

123. தற்பவம் என்றால் என்ன?
வடமொழிச் சொற்களைத் தமிழில் வழங்கும் போது தமிழ் மொழிக்கு உரிய சிறப்பான எழுத்துக்களால் வழங்குதல் ஆகும்.
உ+ம்: புத்தகம், இலட்சியம்

124. தற்சமம் என்றால் என்ன?
பிறமொழிச் சொல்லுக்கும் தமிழ் மொழிக்கும் பொதுவான எழுத்துக்களால் அமைந்த சொல் தற்சமம் ஆகும்.
உ+ம்: கமலம், குங்குமம்

125. தமிழில் வழங்கும் இருவகை வழக்குகள் யாவை?
இயல்புவழக்கு, தகுதிவழக்கு இரண்டுமாம்

126. இயல்பு வழக்கு எவை?
1) இலக்கணமுடையது நிலம், நீர்
2) இலக்கணப் போலி: இல்முன் - முன்றில்
3) மரூஉ: எம்தந்தை - எந்தை

127. தகுதி வழக்கு எவை?
1) இடக்கரடக்கல்: மலங்கழுவிவருதல் - கால்கழுவிவருதல்
2) மங்கலம்: செத்தார் - இறையடி சேர்ந்தார்
3) குழூஉக்குறி: மது - கறுப்பு

128. மூவகை மொழிகளும் எவை?
1) ஒருமொழி: நிலம், மண்
2) தொடர்மொழி: இராப்பகல், சேரசோழபாண்டியர்
3) பொதுமொழி: வேங்கை, தாமரை

129. சொல்லின் இயல்பு பற்றிய வகை யாது?
இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்





130. நால்வகைச் சொற்களில் இயற்சொற்கள் எவை?
1) பெயர் இயற்சொல்: நிலம், நீர்
2) வினை இயற்சொல்: நடந்தான், வந்தான்
3) இடை இயற்சொல்: ஆகா, அந்தோ
4) உரி இயற்சொல்: அழுகு, அன்பு

131. நால்வகைச் சொற்களில் திரிசொற்கள் எவை?
1) பெயர்த் திரிசொல்: ஆழி, கிள்ளை
2) வினைத் திரிசொல்: செப்பினான், கிளர்ந்தான்
3) இடைத் திரிசொல் புரைய, அன்ன
4) உரித் திரிசொல்: உறு, தவ

132. திசைச்சொற்கள் என்றால் என்ன?
பல்வேறு மொழிகளில் இருந்து தமிழில் வழங்கும் சொற்களை திசைச் சொற்கள் ஆகும்.

133. வட சொல் என்றால் என்ன?
வடமொழியில் இருந்து தமிழில் வழங்கும் சொற்கள் ஆகும்.
உ+ம்: புட்பம், அசலம், உலோபி

134. திசைச்சொற்களில் சில:
1) அரபுச் சொற்கள்: இமாம், இலாகா
2) போர்த்துக்கேயச் சொற்கள்: அலுமாரி, அலவாங்கு
3) ஒல்லாந்துச் சொற்கள்: உலாந்தா, கக்கூசு
4) ஆங்கிலமொழிச் சொற்கள்: கோப்பி, சீமெந்து
5) உருதுச் சொற்கள்: அத்தர், அண்டா
6) பாரசீகச் சொற்கள்: சிப்பந்தி, சமுக்காளம்
7) இந்தி மொழிச்சொற்கள்: வாபசு, சமாச்சாரம்
8) சிங்கள மொழிச்சொற்கள்: தோடை, முருங்கை
9) தெலுங்கு மொழிச்சொற்கள்: சலவை, விருது
10) மலையாள மொழ்சிசொற்கள்: தளவாடம், கொச்சி
11) பிரான்சு மொழிச்சொற்கள்: பட்டாளம், துருப்பு

## தொடர்கள்

135. தொடர்மொழி என்றால் என்ன?
ஒன்றோடொன்று பொருள்படத் தொடர்ந்து நிற்கும் இரண்டு முதலிய சொற்களின் கூட்டமாகும்.

136. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்?
வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, , பண்புத்தொகை, உவமைத்தொகை, வினைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும்.

137. வேற்றுமைத்தொகை என்றால் என்ன?
"ஐ" முதலிய வேற்றுமையுருபுகள் இடையிலே கெட்டு நிற்கப் பெயரோடு பெயரும், பெயரோடு வினையும், வினைக் குறிப்புப் பெயர்களும் தொடர்வதாம்.
உ+ம்: வீடு கட்டினான் (ஐ)

138. வினைத்தொகை என்றால் என்ன?
பெயரெச்சத்தின் விகுதியும் காலங்காட்டும் இடைநிலையும் கெட்டு நிற்க, அதன் முதன் நிலையோடு பெயர் சொல் தொடர்வதாம்.
உ+ம்: கடிநாய்

139. உவமைத் தொகையாவது யாது?
"போல்" முதலிய உவமை உருபுகள் கெட்டு நிற்க உவமானச் சொல்லோடு உவமேயச் சொல் தொடர்வதாம்.
உ+ம்: பவளவாய்

140. உம்மைத்தொகையாவது யாது?
நால்வகை அளவைகளால் பொருள்களை அளக்குமிடத்து எண்ணும்மை இடையிலும் இறுதியிலும் கெட்டு நிற்க பெயரோடு பெயர் தொடர்வதாம்.
உ+ம்: இராப்பகல்





141. அன்மொழித்தொகை என்றால் என்ன?
வேற்றுமைத்தொகை முதலிய ஐந்து தொகைநிலைத் தொடரும் தத்தம் பொருள்படுமளவில் தொகாது, தாமல்லாத பிறமொழிப்பொருள்படத் தொகுவதாகும்.
உ+ம்: பூங்குழல்

142. தொகாநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்?
எழுவாய்த்தொடர், விளித்தொடர், வேற்றுமைத்தொகை நிலைத்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என ஒன்பதாகும்.

143. அணி என்றால் என்ன?
செய்யுள்கட்கு அழகு செய்வது அணியாகும்.

144. அவை எத்தனை வகைப்படும்?
சொல்லணி, பொருளணி என இருவகைப்படும்.

145. பொருளணிகள் யாவை?
தன்மை அணி, உவமை அணி, உருவக அணி, தற்குறிப்பேற்ற அணி என்பனவாம்.

146. தன்மை அணி என்றால் என்ன?
ஒரு பொருளின் இயல்பான தன்மையை உள்ளவாறு வருணித்துக் கூறுவது தன்மை அணியாகும்.

147. உவமை அணி என்றால் என்ன?
இரு பொருள்கட்கு ஒப்புமை தோன்றக் கூறுவதாம். உவமானம், உவமேயம் முதலிய உறுப்புக்களை உடையது.

148. உருவக அணி என்றால் என்ன?
உவமானத்தின் தன்மையை உவமேயத்தில் ஏற்றி (இரண்டையும் ஒன்றுபடுத்தி) உருவகித்துக் கூறுவதாம்.

149. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?
இயற்கையின்மேல் கவி தனது கற்பனையை ஏற்றிக் கூறுவதாம்.

# புணர்ச்சி

150) *புணர்ச்சியாவது யாது?*
நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வ தாகும்.

151) *அது எத்தனை வகைப்படும்?*
வேற்றுமைப்புணர்ச்சி, அல்வழிப்புணர்ச்சி என இரு வகைப்படும்.

153) *எழுத்துக்கள் எப்படிப் புணரும்?*
இயல்பாகவும் விகாரமாகவும் புணரும்.

154) *இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன?*
நிலைமொழியும் வருமொழியும் விகாரப்படாது புணர்வ தாகும்.

155) *வழாநிலையாவது யாது?*
முடிக்கப்படும் சொற்களோடு முடிக்குஞ் சொற்கள் திணை, பால் முதலியவைகளில் மாறுபடாமல் தொடர்ந்து நிற்பது வழாநிலையாகும்.

156) *வழு நிலையாவது யாது?*
இருதிணை, ஐம்பால், மூவிடம், வினா, விடை, மரபுகள் ஆகியன முறைதவறி வந்தால் வழுவாம்.

157) *வழுமை என்றால் என்ன?*
திணை, பால் எண், இடம் காலம் முதலியனவும் வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும் கலந்து ஒரு தொடராக வருவதுவாயின் இழிவாலும் சிறப்பாலும் ஒரு முடிவாம். தவறாகத் தோன்றினும் பெரியோர் இதனை ஏற்றுக்கொள்வர்.





**புணர்ச்சி - உதாரணங்கள்**

இயல்புப்புணர்ச்சி: பெரியபெண், பொன்மலர்

விகாரப்புணர்ச்சி: வாழை + பழம் = வாழைப்பழம்
(தோன்றல் விகாரம்)
பல் + கோயில் = பற்கோயில்
(திரிதல் விகாரம்)
மரம் + வேர் = மரவேர்
(கெடுதல் விகாரம்)

**உயிர்முன் உயிர் :**

இ, ஈ, ஐ ஆகிய உயிர்முன் உயிர் வந்தால் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

மணி + அழகு = மணியழகு
தீ + எரிந்தது = தீயெரிந்தது
பனை + ஓலை = பனையோலை

அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய உயிர்முன் உயிர் வந்தால் வகரம் உடம்படுமெய்யாக வரும்.

பல + அணி = பலவணி
பலா + இலை = பலாவிலை
திரு + அடி = திருவடி
பூ + அரும்பு = பூவரும்பு
நொ + அழகா = நொவ்வழகா
கோ + அழகு = கோவழகு
கௌ + அழகு = கௌவழகு

**உயிர்முன் மெல்லினமும் இடையினமும்:**

பனை + நார் = பனைநார்
குதிரை + வண்டி = குதிரை வண்டி

**மெய்முன் உயிர்:**

தனிக்குற்றெழுத்தைச் சாராத மெய்யீற்றின் முன் உயிர் வந்தால்:

மெய் + உரை = மெய்யுரை
ஆண் + அழகன் = ஆணழகன்
வேல் + ஆயுதம் = வேலாயுதம்

தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் நிலைமொழி மெய் இரட்டிக்கும். இரட்டித்த மெய்யின் மேல் உயிர் ஏறும்.

பெண் + அழகி = பெண்ணழகி

குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால் தான் ஏறிநின்ற மெய்யை விட்டு உகரம் கெடும்.

கட்டு + அவிழ்ந்தது = கட்டவிழ்ந்தது.

குற்றியலுகரத்தின் முன் யகரம் வந்தால் இகரமாகும்.

நாகு + யாது = நாகியாது.

**மேலும் சில புணர்ச்சிகள்**

**மகர ஈறு:**

மரம் + கிளை = மரக்கிளை
மரம் + சிறிது = மரஞ்சிறிது

**வினா, விளி, முன்:**

ஆ + சிறிது = ஆசிறிது
நீரே + நின்றீர் = நீரேநின்றீர்

**குற்றியலுகரத்தின் முன் வல்லினம்:**

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு
வண்டு + கால் = வண்டுக்கால்





**சில உயிரீற்று மரபுப்பெயர் முன் வல்லினம்:**

அவனோ + தின்றான் = அவனோதின்றான்
அவளே + சென்றாள் = அவளேசென்றாள்

**ல், ள் ஈற்றுப்புணர்ச்சி:**

கல் + குடம் = கற்குடம்
முள் + சிறிது = முட்சிறிது
கல் + மாண்டது = கன்மாண்டது

**இடைநிலைகள்**

| | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள்: | த், ட், இன், ற் |
| நிகழ்கால இடைநிலைகள்: | கின்று, கிறு |
| எதிர்கால இடைநிலைகள்: | ப், வ் |
| பெயர் இடைநிலைகள்: | ஞ், வ், த், ச் |
| எதிர்மறை இடைநிலைகள்: | இல், அல், ஆ |

**திசைப்பெயர் புணர்ச்சிகள்:**

வடக்கு + கிழக்கு = வடகிழக்கு
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு
மேற்கு + நாடு = மேல்நாடு
கிழக்கு + திசை = கீழ்த்திசை
மேற்கு + திசை = மேற்றிசை
வடக்கு + மொழி = வடமொழி
தெற்கு + மொழி = தென்மொழி

**எண்ணுப்பெயர் புணர்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| ஒன்று + ஆடு | = | ஓராடு |
| இரண்டு + இலை | = | ஈரிலை |
| மூன்று + ஓலை | = | மூவோலை |
| நான்கு+ மணி | = | நான்மணி |
| ஐந்து + மூன்று | = | ஐம்மூன்று |
| ஆறு + கோயில் | = | அறுகோயில் |
| எட்டு + கால் | = | எண்கால் |
| பத்து + ஒன்று | = | பதினொன்று |

**குற்றியலுகரப் புணர்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| பாகு + ஆய | = | பாகாய |
| புகாது + இந்த | = | புகாதிந்த |
| கொண்டு + இழைத்த | = | கொண்டிழைத்த |
| என்று + இனியன | = | என்றினியன |
| நாடு + வருணனை | = | நாட்டுவருணனை |
| கிணறு + நீர் | = | கிணற்றுநீர் |
| ஆடு + கால் | = | ஆட்டுக்கால் |
| சேறு + தரை | = | சேற்றுத்தரை |
| பண்டு + காலம் | = | பண்டைக்காலம் |
| நேற்று + கூலி | = | நேற்றைக்கூலி |
| இன்று + நாள் | = | இற்றைநாள் |

**ணகர னகர புணர்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| மண் + குடம் | = | மட்குடம் |
| மண் + நன்று | = | மண்ணன்று |
| பொன் + தூள் | = | பொற்றூள் |
| பொன் + நாண் | = | பொன்னாண் |





**லகர ளகர புணர்ச்சிகள்**

| | | |
|---|---|---|
| பால் + குடம் | = | பாற்குடம் |
| வில் + தொழில் | = | விற்றொழில் |
| முள் + செடி | = | முட்செடி |
| முள் + மரம் | = | முண்மரம் |

**வாக்கியம்**

- தனிவாக்கியம்
  - கூற்றுவாக்கியம்
  - வினாவாக்கியம்
  - ஏவல் வாக்கியம்
  - வியங்கோள் வாக்கியம்
  - உணர்ச்சி வாக்கியம்
- தொடர்வாக்கியம்
- கலப்புவாக்கியம்
  - தன்கூற்றுக் கலப்பு வாக்கியம்
  - பிறர்கூற்றுக் கலப்பு வாக்கியம்

**தொடர்மொழிகள்**

- பெயர்த் தொடர்மொழி
- பெயரெச்சத் தொடர்மொழி
- வினையெச்சத் தொடர்மொழி

**வாக்கியம்**

*158)* வாக்கியம் என்றால் என்ன?
சொற்கள் பொருள்படத் தொடர்ந்து கருத்து முற்றுப் பெற்று நிற்கும் தொடர்மொழி வாக்கியம் எனப்படும்.

*159)* வாக்கியத்தில் முதலில் காணவேண்டிய உறுப்பு எது?
பயனிலை

160) பயனிலையை எவ்வாறு காணலாம்?
வாக்கியத்தினை முடிக்கும்சொல் பயனிலையாகும்.

161) எழுவாயை எப்படிக் காண வேண்டும்?
பயனிலையில் இருந்து யார்? எது? எவை? என்ற வினாக் களை எழுப்பிக் காணலாம்.

162) செயப்படுபொருளை எவ்வாறு காணலாம்?
யாரை? எதை? எவற்றை? என்ற வினாக்களை எழுப்பிக் காணலாம்.

163) எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் வெளிப்படாமல் இருக்கும்போது எவ்வாறு அழைக்கப்படும்?
தோன்றா எழுவாய், தோன்றாப் பயனிலை, தோன்றாச் செயப்படுபொருள்.

164) தோன்றா எழுவாய்க்கு உதாரணம் தருக.
உ+ம்:
நாளைக்கு விழாவுக்கு •போவோம்: நாம்,தோ. எ

165) தோன்றாப் பயனிலைக்கு உதாரணம் தருக.
உ+ம்:
அம்மா எங்கே ... போய்விட்டார். தோ. ப.

166) தோன்றாச் செயப்படுபொருளுக்கு உதாரணம் தருக.
உ+ம்:
தக்ஷிகா அஞ்சல் அலுவலகத்தில் வாங்கினாள்.
முத்திரை. தோ. செ.

167. வாக்கிய அமைப்புக்கு இன்றியமையாத சொற்றொடர்கள் எவை?
பெயரெச்சத்தொடர்மொழி, வினையெச்சத்தொடர்மொழி, பெயர்த் தொடர்மொழி என்ற மூன்றுமாம்.





168. பெயரெச்சத் தொடர்மொழி என்பது யாது?
வாக்கியத்தில் பெயர்ச்சொல்லுக்கு அடைமொழியளவாய் நிற்கும் சொற்றொடர் பெயரெச்சத் தொடர்மொழியாகும்.
உ+ம்: ஒலிம்பிக்கில் விளையாடிய வீரர் வெற்றி பெற்றனர்.

169. வினையெச்சத் தொடர்மொழி என்பது யாது?
வாக்கியத்தில் வினைமுற்றுக்கு அடைமொழியளவாய் நிற்கும் சொற்றொடர் வினையெச்சத் தொடர்மொழியாகும்.
உ+ம்: மனித இனத்தைப் புகழ்ந்து பேசுவர்.

170. பெயர்ச் சொற்றொடர் என்பது யாது?
வாக்கியத்தில் சொற்றொடர்கள் எழுவாயாகவோ செயப்படு பொருளாகவோ வந்து அமைந்து வரும் இடத்து பெயர்ச் சொற்றொடர் எனப்படும்.
உ+ம்:
பன்மொழி அறிஞர் ஞானப்பிரகாசர் தமிழ் அகராதியை இயற்றினார்.

171. வாக்கிய வகைகள் யாவை?
தனிவாக்கியம், தொடர்வாக்கியம், கலப்புவாக்கியம் என்ற மூன்றுமாகும்.

172. தனிவாக்கியம் என்பது யாது?
தனி ஒரு நிகழ்ச்சியை மட்டும் தெரிவிக்கும் வாக்கியம் தனி வாக்கியம் எனப்படும்.
உ+ம்: எலி வளையில் புகுந்தது.

173. தொடர் வாக்கியம் என்பது யாது?
ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளை தெரிவிக்கும் வாக்கியம் தொடர்வாக்கியம் என்றும் கூட்டுவாக்கியம் என்றும் கூறப்படும்.
உ+ம்: மழை பெய்து வெள்ளம் வடிந்து ஓடியது.

174. கலப்பு வாக்கியம் என்பது யாது?
ஒரு தலைமைத் தொடருடன் ஒன்றுக்கு மேற்பட்ட சார்புத் தொடர்கள் கலந்து அமைவது கலப்பு வாக்கியம் ஆகும்.
உ+ம்: "உண்மை பேசு: உத்தமனாக வாழ்" என்றார் காந்தி

175. தனிவாக்கிய வகைகள் யாவை?
கூற்றுவாக்கியம், வினாவாக்கியம், ஏவல்வாக்கியம், வியங் கோள்வாக்கியம், உணர்ச்சிவாக்கியம் என்ற ஐந்துமாம்.

176. கூற்றுவாக்கியம் என்பது யாது?
ஒரு செய்தியை அல்லது நிகழ்ச்சியைத் தெரிவிக்கும் வாக்கியம் கூற்றுவாக்கியம் எனப்படும்.
உ+ம்: மழை பெய்தது.

177. வினா வாக்கியம் என்பது யாது?
ஒரு செய்தியை அறியும் நோக்கோடு கேட்கப்படும் வாக்கியம்
உ+ம்: இன்று பாடசாலை நடைபெறுமா?

178. ஏவல் வாக்கியம் என்பது யாது?
ஒரு செயலைச் செய்யும்படியோ செய்யாதிருக்கும்படியோ கூறும் வாக்கியம் ஆகும்.
உ+ம்: ஒழுங்காகப் படி, தீயவர்களுடன் சேராதே!

179. வியங்கோள் வாக்கியம் என்பது யாது?
வியங்கோள் தன்மையுடன் **க, இய, இயர்** என்ற விகுதிகள் பெற்றுக் கூறப்படும் வாக்கியமாகும்.
உ+ம்:
மக்களிடையே ஒற்றுமை ஓங்குக, செந்தமிழ் வாழிய, மணமக்கள் வாழியர்.

180. உணர்ச்சிவாக்கியம் என்பது யாது?
உணர்ச்சிமயமான சொற்கள் கலந்து கூறப்படும் கூற்று வாக்கியங்களே உணர்ச்சி வாக்கியமாகும்.
உ+ம்: அந்தோ! இறந்து விட்டானே!





181. இரட்டைமொழி என்பது யாது?
தனித்துப் பொருள்தராத ஒரே மாதிரியான இருசொற்கள் தொடர்ந்துவரின் இது இரட்டை மொழியாகும்.
உ+ம்: கமகம, சுறுசுறு, துடிதுடித்து, சலசல

182. அடுக்கு மொழி என்பது யாது?
தனித்துப் பொருள் தரக்கூடிய ஒரே மாதிரியான இரு சொற்கள் தொடர்ந்துவரின் இது அடுக்கு மொழி எனப்படும்.
உ+ம்: மெல்லமெல்ல, புதியபுதிய, சிறியசிறிய

183. இணைமொழிகள் என்றால் என்ன?
ஏதுகை, மோனை, ஒலியொற்றுமை என்பன பற்றி இணைந்துவரும் மொழிகள் இணைமொழிகளாகும்.
உ+ம்: சீரும் சிறப்பும், ஆதியும் அந்தமும், கண்டதுண்டம்

## மேலும் சில உதாரணங்கள்

1. தன்கூற்றுக் கலப்பு வாக்கியம்:
"நாம் நற்பழக்கங்கள் பழகவேண்டும்" என்று அதிபர் மாணவர்களுக்குக் கூறினார்.

2. பிறர்கூற்றுக் கலப்பு வாக்கியம்:
தாய், தாம் பாதையில் நடக்க வேண்டுமென மகனுக்குக் கூறினாள்.

**3. மரபுத் தொடர்கள் சில:**

| | |
|---|---|
| 1. கைகலத்தல்: | சண்டையிடுதல் |
| 2. வாயிழத்தல்: | பேசமுடியாது நிற்றல் |
| 3. கையைக் கடித்தல்: | நட்டம் உண்டாதல் |
| 4. கைகொடுத்தல்: | உதவி செய்தல் |
| 5. கைவிரித்தல்: | மறுத்தல் |
| 6. செவிமடுத்தல்: | கவனமாகக் கேட்டல் |

7. வாய்விடுதல்: உதவி கேட்டல்
8. கண்மூடுதல்: இறத்தல்
9. நாக்குநீளுதல்: அடக்கமின்றிப் பேசுதல்
10. தோள் கொடுத்தல்: தக்கசமயத்தில் உதவிசெய்தல்
11. பெயர்ச்சொல்: மாடு, வீடு
12. வினைச்சொல்: நடந்தான், வந்தான்
13. இடைச்சொல்: அது, கண்
14. உரிச்சொல்: உறு, தவ
15. பொதுப்பெயர்: மரம், விலங்கு
16. சிறப்புப்பெயர்: கிளி, தென்னை
17. பொருட்பெயர்: மயில், மேசை
18. இடப்பெயர்: யாழ்ப்பாணம், முற்றம்
19. காலப்பெயர்: தை, கோடை
20. சினைப்பெயர்: கை, இலை
21. குணப்பெயர்: செம்மை, கோபம்
22. தொழிற்பெயர்: படித்தல், வருதல்
23. வினையாலணையும் பெயர்: நடந்தானைக் கண்டேன்
24. தன்மை: நான், நாம்
25. முன்னிலை: நீர், நீங்கள்
26. படர்க்கை: அவன், அவர்
27. உயர்திணை: தேவன், இராமன்
28. அஃறிணை: மாடு, மேசை
29. ஆண்பால்: அரசன், வேலைக்காரன்
30. பெண்பால்: அரசி, சேவகி
31. பலர்பால்: மனிதர்கள், மன்னர்கள்
32. ஒன்றன்பால்: பசு, எலி
33. பலவின்பால்: மாடுகள், ஆடுகள்
34. வினைமுற்று: அழுதான், ஆடினான்
35. வினைஎச்சம்: நடந்து போனான்
36. பெயரெச்சம்: படித்த பையன்





37. இறந்தகாலம்: பாடினான், போனான்
38. நிகழ்காலம்: ஓடுகின்றான், பாடுகிறான்
39. எதிர்காலம்: ஓடுவான், பாடுவான்
40. தன்வினை: நடந்தேன், அழுதேன்
41. பிறவினை: செய்வித்தேன், திருத்துவித்தேன்
42. செய்வினை: அவன் பாட்டுப் பாடினான்
43. செயப்பாட்டுவினை: பாட்டு அவனால் பாடப்பட்டது
44. இடுகுறிப்பெயர்: மரம், நிலம்
45. காரணப் பெயர்: பறவை. மண்வெட்டி
46. காரண இடுகுறிப் பெயர்: நாற்காலி, முள்ளி
47. ஆகுபெயர்: நயினாதீவு வென்றது
48. ஏவல் வினைமுற்று: சொல்லுதி, செலுத்து
49. வியங்கோள் வினை முற்று: வாழ்க, வாழியர்
50. எதிர்மறை ஏவல்: காணாதே, உண்ணாதே
51. வினைத்தொகை: கொல்யானை. விடுகதை
52. வேற்றுமைத் தொகை: கயற்கண், பொற்குடம்
53. உம்மைத்தொகை: இராப்பகல், ஒன்றேகால்
54. அன்மொழித்தொகை: கயற்கண் வந்தாள், பூங்குழல் வந்தாள்
55. உவமைத்தொகை: துடியிடை, பவளவாய்
56. பண்புத்தொகை: கருங்குதிரை, சதுரப்பலகை
57. திணைவழுநிலை: அவன் வந்தது
58. பால்வழுநிலை: அவன் வந்தாள்
59. இடவழுநிலை: யான் வந்தான்
60. காலவழுநிலை: நாளைவந்தான்
61. வழாநிலை: அவர் நாளை வருவார்.
62. திணைவழுவமைதி: ஆண்குழந்தை பிறந்தது.
63. பால்வழுவமைதி: இராமன் வந்தார்.
64. இடவழுவமைதி: நீ நல்லவன்.
65. கால வழுவமைதி: மலை நிற்கின்றது.
66. எண் வழுவமைதி: எல்லாத் தலைமுடியும் நரைத்தது.

அருஞ்சொற்கள் சில

| | | | |
|---|---|---|---|
| 1. | விரகு | - | உபாயம் |
| 2. | குறங்கு | - | தொடை |
| 3. | பொருப்பு | - | மலை |
| 4. | விழை | - | விருப்பு |
| 5. | அளை | - | புற்று |
| 6. | புல்லி | - | புறவிதழ் |
| 7. | அளகு | - | காட்டுக்கோழி |
| 8. | களகம் | - | பெருச்சாளி |
| 9. | மணை | - | கூரில்லாதது |
| 10. | கண்டல் | - | தாழை |
| 11. | பணை | - | பருமை |
| 12. | புனை | - | தெப்பம் (தோணி) |
| 13. | அணல் | - | மிடறு (மேல்வாய்) |
| 14. | ஞெகிழி | - | தீக்கோல் |
| 15. | ஞொள்குதல் | - | அஞ்சுதல் |
| 16. | ஞிமிறு | - | வண்டு |
| 17. | பண்பாடு | - | நல்இயல்பு |
| 18. | ஆர்ப்ப | - | ஒலிக்க |
| 19. | உவப்பன | - | விரும்புவன |
| 20. | மணவணி நாள் | - | திருமணநாள் |
| 21. | ஆளுகை | - | ஆட்சி |
| 22. | சான்று | - | ஆதாரம் |
| 23. | உள்ளுநர் | - | நினைப்பவர் |
| 24. | தாரகை | - | நட்சத்திரம் |
| 25. | அற்றார் | - | வறியவர் |
| 26. | கன்னம் | - | துளை உண்டாக்கல் |
| 27. | தந்தம் | - | பல் |
| 28. | கழுத்துக் குட்டை | - | கழுத்தில் கட்டப்படும் துணி |
| 29. | அங்காத்தல் | - | வாயைத் திறந்திருத்தல் |





| | | | |
|---|---|---|---|
| 30. | வன்னம் | - | வேலைப்பாடு |
| 31. | அமுது | - | இனிமை, சோறு |
| 32. | குழல் | - | கூந்தல் |
| 33. | குடில் | - | குடிசை |
| 34. | அருளாளர் | - | மதிப்புக்குரியவர் |
| 35. | மாண்பு | - | பெருமை |
| 36. | இம்மை | - | இவ்வுலக வாழ்வு |
| 37. | புர்கான்(அரபு) | - | திருக்குர் ஆன் |
| 38. | கல்பினால் (அரபு) | - | மனத்தினால் |
| 39. | தீனோர்(அரபு) | - | சன்மார்க்கவழி நிற்போர் |
| 40. | கிதாபுகள்(அரபு) | - | நூல்கள் |
| 41. | வழுதுணங்காய் | - | கத்தரிக்காய் |
| 42. | கரிக்காய் | - | அத்திக்காய் |
| 43. | வெய்துயிர்த்தல் | - | பெருமூச்சுவிடுதல் |
| 44. | சாற்றுதல் | - | கூறுதல் |
| 45. | மடவார் | - | பெண்கள் |
| 46. | நறுந்துகள் | - | வாசனைப் பொடி |

## விழாக்கள்

1) 25 ஆவது ஆண்டுகளில் கொண்டாடப்படுவது எது?
வெள்ளிவிழா

2) 50 ஆவது ஆண்டுகளில் கொண்டாடப்படுவது எது?
பொன்விழா

3) 60 ஆவது ஆண்டுகளில் கொண்டாடப்படுவது எது?
மணி விழா

4) 75 ஆவது ஆண்டுகளில் கொண்டாடப்படுவது எது?
வைரவிழா, பவளவிழா

5) 100 ஆவது ஆண்டுகளில் கொண்டாடப்படுவது எது?
நூற்றாண்டுவிழா

# சிந்திக்கச் சில வரிகள்

1. நியாயத்தைக் கடைப்பிடிப்பவன் பொறாமையின் மத்தியிலும் முன்னேறுவான்.

2. பலமுள்ளவனாக இருக்க விரும்பினால் உன்னுடைய பலவீனங் களைத் தெரிந்துகொள்.

3. நாக்கு கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்.

4. தொழில் எத்தனை கீழ்த்தரமாயினும் அவமானமில்லை.

5. நெல்லும் ஆலயமாவது அல்லது அற்பப் பொருளாவது நாம் அதில் போட்டு வைத்திருக்கும் எண்ணத்தைப் பொறுத்தது.

6. பிறரிடத்தில் இருந்து நீ என்ன எதிர்பார்க்கிறாயோ அதையே நீ பிறருக்குக் கொடு.

7. வெற்றி என்பது விழாமல் இருப்பதால் நீ விழுகின்ற ஒவ்வொரு முறையும் கம்பீரமாக மீண்டும் எழுந்து நிற்பதே மேல்.


8. அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டே இருப்பதை விடுங்கள்.

9. மிக விரைவாக நண்பர்களைப் பெற்றுக்கொண்டே போகிறவன் அதி விரைவாக நண்பர்களை இழந்துகொண்டே வருவான்.

10. குழந்தை என்ற புதுப்பெயரில் வெளிவந்தாய். மாணவன், வாலிபன் மனிதன் என்ற போர்வையில் வாழ்கின்றாய். பிணம் என்ற மறுபெயரில் உள்ளே செல்கின்றாய். எல்லாம் மாயை.



# உறவு சொல்லும் உதிரங்கள்



# நன்றி நவிலல்



'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று '



எம்மையெல்லாம் அதிர்ச்சியில் ஆழ்த்தி
மீளாத்துயில் கொண்ட எமது குடும்பக் குலவிளக்கின்
பிரிவுச் செய்தி கேட்டு உள்ளூரிலும், வெளியூரிலும் இருந்து
ஓடோடி வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும்,
தொலைபேசி மூலம் உள்ளூரிலும், வெளியூரிலும் இருந்து
தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார்,
உறவினர், நண்பர்களுக்கும், மலர்வளையம் வைத்து
அஞ்சலி செலுத்திய உயர்தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும்
'துளிர்' நிறுவ மாணவர்களுக்கும், இரங்கலுரை
நிகழ்த்தியோருக்கும், மற்றும் தங்களால் இயன்றவரை
உதவி வழங்கிய நல் உள்ளங்களுக்கும், 'இலக்கணத் தேறல்'
என்ற நூலினை பிரதியாக்கம் செய்துகொள்ள அநுமதியளித்த
ஆசிரியர் காசிநாதன் அவர்கட்கும், இன்று
நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும், சபிண்டீகரண
நிகழ்விலும் கலந்துகொண்ட அனைவருக்கும்
எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

164, கச்சேரியடி,
கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்



பாரதி பதிப்பகம், காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம். T.P : 021 222 3081